www.padippakam.com

# ஜீன்ஸ் பேண்ட்டும் பாலியல் வன்முறையும்

முதலான கட்டுரைகள்

வினவு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஜீன்ஸ் பேண்ட்டும் பாலியல் வன்முறையும்...

## முதலான கட்டுரைகள்

*புதிய கலாச்சாரம்*
வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

*நூல்:*

ஜீன்ஸ் பேண்ட்டும் பாலியல் வன்முறையும்...
முதலான கட்டுரைகள்

*ஆசிரியர்:*

வினவு
http://vinavu.wordpress.com
vinavu@gmail.com

*முதற்பதிப்பு:*

ஜனவரி 2009

*வெளியிடுவோர்:*

புதிய கலாச்சாரம்
சென்னை - 83.

*கிடைக்குமிடங்கள்:*

இரா. சீனிவாசன்,
புதிய கலாச்சாரம்,
16, முல்லை நகர் வணிக வளாகம், 2ஆவது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்), அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044 - 2371 8706, செல்பேசி : 99411 75876

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி: 044 - 28412367

*விலை:* ரூ. **25.00**

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 4 |
| அழகு - சில குறிப்புகள் | 5 |
| உப்பிட்டவனை உடனே கொல்! | 14 |
| கருகும் கனவுகள்! | 19 |
| இது காதலா? கள்ளக்காதலா? | 24 |
| காதலைத் தீர்மானிப்பது அப்பியரன்சா, அப்ரோச்சா, அரிவாளா? | 29 |
| பீச் வாலிபால்: கமான் இந்தியா! ஒன்பது அங்குலம்தான் பாக்கி!! | 35 |
| ரிலையன்ஸ் ஃபிரஷ்ஷில் மனிதக் கறி! | 39 |
| ஜீன்ஸ் பேண்ட்டும், பாலியல் வன்முறையும்! | 44 |


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

ஒரு குக்கிராமத்தில் நடக்கும் சம்பவம் கூட செய்தியாக உடனுக்குடன் ஊடகங்களில் இடம் பெறும் வண்ணம் தொழில் நுட்பமும், செய்திகளுக்கான வலைப் பின்னலும் அபாரமாக வளர்ந்துள்ளது. ஆனால் தமக்கு வெளியே உள்ள வாழ்க்கையைப் பற்றி மக்கள் தெரிந்து கொண்டு சமூக மனிதனாக பரிணமிப்பதற்கு இந்த வளர்ச்சியே உதவிவிடுவதில்லை. காதல், தற்கொலை, கொலை குறித்த செய்திகள் எல்லாம் மலிவான ரசனையைக் கருத்தில் கொண்டு பரபரப்பிற்காகவே வெளியிடப் படுகின்றன. நவீன வாழ்க்கையின் சீரழிவுகள் மற்றும் தோற்றுப் போன உறவுகளின் சாட்சியங்களாக வெளிப்படும் இத்தகைய சம்பவங்கள் எதுவும் அதற்குரிய கவலையுடனோ அக்கறையுடனோ ஊடகங்களால் வெளியிடப்படுவதில்லை. இதன் விளைவாக, ஒரு கள்ளக் காதல் கொலை கூட அதிர்ச்சியை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, தானும் அத்தகையதொரு முயற்சியில் இரகசியமாய் இறங்கலாமென்ற திருட்டுத்தனமான ஆசையை வாசகனின் மனதில் ஏற்படுத்துகின்றது. அதிர்ச்சியின் இடத்தை ஆசை நிரப்புகிறது. விளைவு என்னவென்றால் ஏற்கனவே போலியான உறவுகளால் நீர்த்துப் போயிருக்கும் வாழ்க்கை உறவுகள் தம்மைப் பற்றிய சுய விமரிசனமின்றி காரியவாதத்தையும், பிழைப்புவாதத்தையும் மாற்றாகத் தேடிக் கொள்கின்றன.

அடுத்த வீட்டில் நடக்கும் சங்கதிகளை இரசனையோடு பார்த்து கிசுகிசுவாய் அசைபோடும் எவரும் அதே சம்பவம் நமது வீட்டிலும் நடக்கலாம் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை. நடந்த பிறகே அதன் துயரத்தை அனுபவிக்கிறார்கள். ஒருபுறம் நுகர்வுக் கலாச்சாரத்தையும், மறுபுறம் நாட்டையே சுரண்டுவதையும் ஒருங்கே கட்டவிழ்த்து விடும் மறுகாலனியாதிக்க கொள்கையின் பண்பாட்டு சீர்குலைவுகள்தான் பத்திரிகைகளில் நாம் காணும் கொலைகளாய், தற்கொலைகளாய் வடிவெடுக்கின்றன. இங்கே அத்தகைய சம்பவங்களும், செய்திகளும் ஒரு கண்ணோட்டத்தை ஏற்படுத்தும் வண்ணம் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரைகள் எமது தோழர்கள் நடத்தும் வினவு இணையத் தளத்தில் சமீப மாதங்களில் எழுதப்பட்டு ஆயிரக்கணக்கான வாசகர்களிடம் வரவேற்பைப் பெற்றவை. இக்கட்டுரைகளை ஒருங்கே படிக்கும்போது அன்றாடம் நாம் கடந்து செல்லும் பல்வேறு சமூக பண்பாட்டுப் பிரச்சினைகள் குறித்த சரியான பார்வையையும் விழுமியங்களையும் கற்றுக்கொள்ள முடியும் என்பதால் இக்கட்டுரைகளை உங்களை பார்வைக்குத் தருகிறோம்.

தோழமையுடன்,<br>
ஆசிரியர் குழு,<br>
புதிய கலாச்சாரம்.

ஜனவரி, 2009



படிப்பகம்

www.padippakam.com

## அழகு - சில குறிப்புகள்!

நிலைக்கண்ணாடி முன் நின்று கொண்டு தனது முகஅமைப்பின் ஒழுங்குகள் குறித்து கவலைப்படுவதும், அதைக் குறைந்தபட்சம் முடி, முகப்பூச்சு மூலம் செப்பனிடுவதற்காக மிகுந்த பிரயத்தனம் செய்வதும் விடலைப் பருவத்தின் தவிர்க்க இயலாத பழக்கம். பிறகு திருமணம், குழந்தைகள் என்று வாழ்க்கையில் நிலைபெற்ற பிறகு இவை மறந்து போனாலும் தனது அழகின் தரம் பற்றியும் தனக்கு கிடைக்காத வாழ்க்கைத் துணையின் அழகு பற்றியும் எல்லோருக்கும் ஒரு ஏக்கமும், எதிர்பார்ப்பும் இருக்கும். எது அழகு? எதெல்லாம் அழகின்மையோ அவற்றைத் தவிர மற்றெதுவும் அழகுதான். எவையெல்லாம் அழகின்மைகள்? அவற்றை ஊடகங்களும், சினிமா உலகமும், அழகு சாதனப் பொருட்களை விற்பனை செய்யும் பன்னாட்டு நிறுவனங்களும் வடிவமைத்து கற்றுத் தருகின்றன.

இளவயதில் விழும் வழுக்கை, மாற்ற முடியாத கருப்புநிறம், சீரற்றிருக்கும் பல்வரிசை, உட்கார்ந்து வேலைசெய்பவருக்கு வரும் தொந்தி, பெண் மார்பகத்தின் சிறிய அளவு, குறைய மறுக்கும் பின்னழகு, படியாத முடி, சுருளாத கூந்தல், வளராத கேசம், இள நரை, விரியாத ஆண் மார்பு, சதையற்ற புஜங்கள், கருப்பு வளையத்தால் சூழப்பட்டிருக்கும் இமைகள், வயிற்றுப் பிரச்சினைகளால் வரும் வாய் நாற்றம், கட்டுப்படுத்த முடியாத வியர்வை மணம்... இவையெல்லாம் வர்த்தகமயமாகும் கல்வி, வேலையின்மை போன்ற



படிப்பகம்

www.padippakam.com

இளையோரின் முக்கியமான பிரச்சினைகளை முந்திச் செல்லும் அளவுக்கு செல்வாக்கு செலுத்துகின்றன.

சீர்வரிசையாக அணிவகுக்கும் இந்த அழகின்மைகள் இருந்தால் உங்கள் வாழ்க்கை விரும்பத்தக்கதாக இருக்காது என்பதை ஊடகங்கள் ஓயாமல் பயமுறுத்துகின்றன. தொடர்ந்து ஓதப்படும் அழகின்மையின் அபாயங்கள் மனதின் ஆழத்தில் உறுதியாகப் பதிந்துவிடுகின்றன. தனக்கு கிடைக்காத நட்பு, காதல், திருமணம், தாம்பத்தியம் முதலானவற்றுக்கு தன்னிடம் இருக்கும் அழகின்மையே காரணமென்று ஒரு தாழ்வு மனப்பான்மை அச்சுறுத்தும் வண்ணம் தலைதூக்குகின்றது. இந்த தாழ்ந்துபோதல் நம்பிக்கையுடன் எதிர்கொள்ள வேண்டிய வாழ்க்கையை சோர்வுடன் இயங்க வைக்கின்றது. அழகின்மையின் இலக்கணங்கள் ஆளுமையின் உருவாக்கத்திற்குள் ஊடுறுவுவதிலும் தவறுவதில்லை. தன்னுடைய உருவத்தின் போதாமையால் இதற்குமேல் எதிர்பார்ப்பதில் அர்த்தமில்லை என்று சாதிக்க வேண்டிய வயதில் விடலைப்பருவம் சுருக்கிக் கொள்கின்றது.

பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் தனித்துவம் இல்லாமல் வாழவேண்டிய ஒரு பெண்ணுக்கு அழகின் வாய்ப்பாடங்கள் அத்துபடியாகும் அளவுக்கு ஒரு தவிர்க்க இயலாத பிரச்சினை அது. வயதுக்கு வந்தது முதல் வளைகாப்பு வரை அவள் தன்னழகை மிகச்சிறப்பாகப் பேணிக் காக்கும் கட்டாயத்திற்கு ஆளாகின்றாள். அவளது வாழ்வின் பெரும்பகுதியை அலங்காரத்திற்கு அர்ப்பணிப்பது நிர்ப்பந்தமாகவே இருக்கின்றது. அழகின் இலக்கணத்தில் ஒன்று குறைந்தால் கூட பலவற்றை இழப்பதற்கு அவள் தயாராக இருக்க வேண்டும். அழகு குறித்த அச்சமே ஒரு பெண்ணின் வாழ்க்கை குறித்த அச்சமாக மாறுகின்றது.

குழந்தையாக இருக்கும்போது காது குத்துதல், பெயர் சூட்டும் வைபவம், வயதுக்கு வந்ததும் பூப்பெய்தும் சடங்கு, நிச்சய தார்த்தம், தாலிக்குப் பொன்னுருக்கல், வளைகாப்பு, கணவன் இறந்தால் அலங்காரங்களைத் துறக்கும் விதவைச் சடங்கு, எனக் கருவறை முதல் கல்லறை வரை ஒரு பெண்ணின் அடிமைத்தனத்தை அறிவிக்கும் விசேசங்கள் எல்லாவற்றிலும் அழகு நிழல் போல பின் தொடர்ந்து மிரட்டுகின்றது. ஒரு ஆண் எத்தனை அழுக்காக இருந்தாலும் ஒரு பெண் குளித்து முடித்து பூச்சூடிச் சுத்தமாக இருக்க



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும். அவள் தாலியும், நெற்றியின் உச்சியில் வைக்கப்படும் பொட்டும் அலங்காரத்திற்கு மட்டுமல்ல, அவள் கன்னி கழிந்தவள் என்பதை ஆண்களுக்கு தெரிவிக்கவும் செய்கின்றன.

அவளது காலழகை வெளிப்படுத்துவதற்காக என்று போடப் படும் கால் கொலுசு உண்மையில் அவளது நடமாட்டத்தைக் கண் காணிப்பதற்கென்றே பண்டைய காலத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. எத்தனை அழகாக இருந்தாலும் ஊடுறுவும் ஆண்களின் கண்களைத் தடுப்பதற்காகவே அவள் முசுலீமாக இருந்தால் பர்தா அணிய வேண்டும். இல்லத்து நிகழ்ச்சிகள் அனைத்திலும் கனமான பட்டை ஜொலிக்கும் வண்ணம் அவள் உடுத்தியே ஆக வேண்டும்.

கல்லூரிக் காலங்களில் பெண்களைக் கவரும் அளவுக்கு அழகைக் கைப்பற்றுவது ஆணுக்கு அன்றாடக் கடமையாகின்றது. அழகில்லாத ஆண்களை எந்தப் பெண்ணும் ஏறெடுத்துப் பார்க்க மாட்டாள் என்பதே அந்த இளைஞனைப் பயமுறுத்தும் யதார்த்தம். அவன் எதிர்காலத்தில் என்னவாக ஆகப்போகின்றான் என்பதை திசைதிருப்பும் மைல் கற்களும் இந்த அழகுக் கால அத்தியாத்தில் இடம் பெறுகின்றன. புதிய உடை, முடி பாணிகளை உடைமை யாக்கிக் கொள்வதற்கு அவசரப்படும் இந்த இளைஞர்கள் அவை பொருளாதார ரீதியாக கைகூடாமல் போனால் கொலைவெறி கொள் கிறார்கள். தன் அழகுக்கு செலவிட மறுக்கும் பெற்றோரை அவர்கள் ஒருபோதும் மன்னிப்பதில்லை. தந்தை தனயன் முரண்பாட்டில் அழ கிற்கும் ஒரு பிராதான பாத்திரம் உண்டு.

அழகிற்காகச் செலவிடப்படும் தொகை வேண்டுமானால் வேறு படலாமே ஒழிய அழகு குறித்த கவலைக்கும் ஒதுக்கீட்டிற்கும் வர்க்க வேறுபாடு இல்லை. ஏற்றுமதி நிறுவனத்தில் ஒரிரு ஆயிரங்க ளுக்கு வேலை செய்யும் பெண்ணுக்கும், மென்பொருள் துறையில் பல ஆயிரங்களுக்கு வேலை செய்யும் பெண்ணுக்கும் அவர்களது வருமானத்தில் கணிசமான அளவை அழகின் வேலைப்பாடுக ளுக்காக ஒதுக்குவது இயல்பானது. நடுத்தர வர்க்கப் பெண்கள் அழகு நிலையம் செல்வது இப்போது முன்னெப்போதையும் விட அதிகரித்திருக்கின்றது. வேலைக்குச் செல்லும் பெண்கள் நாளொன் றுக்கு ஒரு ஆடை வீதம் பல ஜோடிகளை அடுக்கி வைப்பது கட் டாயம். ஆடைக்கேற்ற அலங்காரப் பொருள்கள், பை, செருப்பு, அவளது கைப்பையை நிரப்பும் முகப்பூச்சுப் பொருள்கள்... முடிவில்



படிப்பகம்

www.padippakam.com

லாமல் நீளும் இந்தப் பட்டியலை அவர்கள் அன்றாடம் பராமரிக்க வேண்டும்.

இத்தகைய செயற்கை அழகு சாதனப் பொருள்களால் உலகின் நுகர்வுப்பொருள் சந்தை பல டிரில்லியன் வருமானத்தைப் பெற்றுத் தருகின்றது என்றால் இதன் மதிப்பை யாரும் அறியலாம். இதற்காக மந்திரம் போல தினசரி ஓதப்படும் விளம்பரங்களின் மதிப்பும் பல மில்லியன்களைத் தாண்டும். அழகு சாதனப் பொருள்களுக்கு மட்டு மல்ல, வீட்டு உபயோகப் பொருள்கள் முதல் குடும்பத்தோடு செல்லும் சுற்றுலா வரை எல்லா விளம்பரங்களுக்கும் அழகான மனி தர்கள் குறிப்பாகப் பெண்கள் பயன்படுகின்றார்கள். அழகின் மையைச் சொல்லி அச்சுறுத்தும் விளம்பரங்கள் அழகான மாந்தரை முன்னிறுத்துவதற்கும் தவறுவதில்லை. உலக அழகி ஐஸ்வர்யா ராய் முதல் உள்ளூர் அழகி த்ரிஷா வரை பாலிவுட்டின் சல்மான்கான் முதல் கோலிவுட்டின் சூர்யா வரை எது அழகு என்பதை நொடி தோறும் மாயத்திரையின் பிம்பங்களாக வந்து நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றார்கள்.

ஐஸ்வர்யா ராயை ஆராய்ந்தால் சாமுத்ரிகா இலட்சணத்தை தனியாக படிக்க வேண்டியதில்லை. முகம், கன்னம், கண்கள், காது, உதடு, உடலழகு அனைத்தும் மிகச்சரியான விதத்தில் அச்சில் வார்த்தது போல இருக்கும். உண்மையிலேயே இப்படி அச்சில் வார்க்கப்பட்ட பெண் சிறுமிப் பொம்மைதான் அமெரிக்காவின் பார்பி டால். குழந்தைகளுக்குக்கூட அழகான பெண்ணின் இலக் கணம் இந்த பார்பி டாலின் மூலமாகப் பசுமரத்தாணி போல பதிந்து விடுகின்றது. குழந்தைகள் விளையாடுவதற்காக இலட்சக்க ணக்கான பார்பிக்களை உற்பத்தி செய்ய முடியும். ஆனால் எல் லோரும் ஐஸ்வர்யா ராய், சல்மான் கான் போல மாறுவதோ, இல்லை அவர்களைப் போல உள்ளவர்களே வாழ்க்கைத் துணையாக வரவேண்டும் என்று விரும்புவதோ சாத்தியமா என்ன?

கானகத்தின் பசும்புல் தரையில் பாய்ந்தோடும் ஒரு வரிக்குதி ரையின் வரிவடிவம் மற்றொரு குதிரையைப் போல இருக்காது என் பதுதானே எல்லா உயிர்களுக்கும் பொருந்தும் உண்மை. ஒருவ னுக்கு இருக்கும் கைரேகை போல மற்றொருவனுக்கு இருக்காது என்பது உண்மையாகும் பட்சத்தில் மனிதர்கள் எல்லோரும் உட லளவில் வேறுபட்டுத்தானே இருப்பார்கள்? வேறுபடுவதுதான்



படிப்பகம்

www.padippakam.com

மனிதனின் உயிரியல் சார்ந்த உண்மையான அழகேயன்றி ஒரே மாதிரியான வார்ப்பு அல்ல. ஆனால் அழகின் வியாபாரிகள் இந்த உயிரியல் உண்மையைப் புனைவுகளின் மூலம் பொய்யாக்கி விளம்பரங்களின் மூலம் சிந்தையில் ஏற்றுகின்றார்கள். எல்லோரையும் ஒரே மாதிரி மாற்றும் தொழில் நுட்பத்தை வழங்கும் குளோனிங் எதிர்காலத்தில் நிறைவேறி விடுமென்றாலும் உலக அழகிகளைப் போல குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது ஒன்றும் மலிவாகிவிடப் போவதில்லை. அப்படியே மலிவாகிப் போனாலும் அது மட்டும் அழகின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடுமா என்ன? உயிரியல் ஜீன்களால் கருவில் பதிக்கப்படும் ஒரு மனித உயிரின் உடல் வடிவை மட்டும் வைத்தா அந்த மனிதனை மதிக்கின்றோம்?

வயிற்றுப் போக்கால் அவதிப்படும் கணவனின் வாய் நாறுகிறது என்பதாலும், இரத்தப் போக்கால் பலமிழக்கும் மனைவியிடம் உடல் மணக்கவில்லை என்றால் அவர்களை வெறுக்க முடியுமா? முடக்கு வாதத்தால் முடங்கிப் போகும் தந்தை காலைக்கடன் முடிப்பதற்கு உதவுவதில் அருவறுப்பு கொள்ள முடியுமா? இளநரையும், வழுக்கையும் கொண்டவர் என்பதால் ஒரு நல்ல உள்ளம் கொண்ட இளைஞனின் திருமணம் தள்ளிப் போவது நியாயம்தானா?

ஒரு மனிதனின் அழகு அவனுடைய தோற்றத்தில் இல்லை. அவனுடைய நடத்தைதான் அவனுடைய அழகின் வெளிப்புலமாக இருக்கின்றது. தோற்றத்திற்கும், நடத்தைக்குமான முரண்பாட்டில் நாம் ஒருவரின் அழகை வைத்தா மதிப்படுகின்றோம்? ஒரு நாவலோ, திரைப்படமோ முதலில் நம் மனதில் பாதிப்பை ஏற்படுத்துவது அதன் உள்ளடக்கம்தான். வடிவம் என்ற அலங்காரம் இரண்டாம் பட்சமானதுதான். இலக்கியத்திற்குப் பொருந்தும் இந்த நியாயம் வாழ்க்கைக்கும் பொருந்துமல்லவா? ஆனால் நடப்பு உலகம் பெரும்பாலும் அப்படி இயங்குவது இல்லை. கறுப்புத் தமிழச்சி என்னதான் அழகாக ஆங்கிலம் பேசினாலும் அவள் ஒரு போதும் விமானப் பணிப்பெண்ணாக வரமுடியாது. ஹீரோக்களின் எதிர்மறைத் தோற்றத்தில் இருப்பவர்களே காமடியன்களாக வர முடியும். வேட்டி சட்டையோடு யதார்த்தமாக வரும் ஒரு தமிழனுக்கு தமிழ்நாடு கிரிக்கெட் சங்க அலுவலகத்தில் இடம் கிடையாது. நவீன அழகியல் கோரும் அம்சங்கள் இல்லாத பெண்கள் என்னதான் அழகாக தமிழீசில் பேசினாலும் தொகுப்பாளினியாகப் பணியாற்ற



படிப்பகம்

www.padippakam.com

முடியாது. கிராமத்து தோற்றம், நடத்தையுடன் வரும் நாட்டுப்பு றத்து மனிதர்களை அதிகார வர்க்கம் அலட்சியமாகவே நடத்தும்.

இப்படி சமூகம் அழகை வைத்துதான் பாகுபாடு காட்டி நடத்து கின்றது என்றாலும் சமூக வாழ்க்கையில் இதைத் தமது ஆளு மையால் வென்றவர்களும் இருக்கின்றார்கள். சுயநலமின்றி மற்ற வருக்காகக் கவலைப்படுவதும், அதற்காகத் தமது வாழ்க்கையைச் செலவிடுவதற்கேற்ப ஒரு மனிதனின் அழகு அவனது தோற்றத்தை மீறி ஒளிர்கின்றது. மக்கள் நிபந்தனையில்லாமல் நேசிக்கும் ஒரு மனிதன் மற்றவர்களால் விரும்பப்படக் கூடியவனாகவும் இருப்பான். தான் செய்யும் தொழிலை இன்முகத்துடன், மற்றவர்க ளுக்கு பணியாற்றக் கிடைத்த வாய்ப்பு என்ற மரியாதையுடன் செய் பவனை நாடி மக்கள் கூட்டம் நிச்சயம் மொய்க்கும். இவர்க ளெல்லாம் தலைவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை.

மாநகரப் பேருந்தின் அந்த நடத்துநர் எப்போதும் தூய தமி ழில்தான் பேசுவார். அவரது அலுவல் நிமித்தமாகப் பயணிகளுடன் பேசுவதையும், நிறுத்தங்களை அறிவிப்பதையும், மாணவர்களின் சேட்டையை நல்ல தமிழில் நாசுக்காகக் கட்டுப்படுத்துவதையும் அவரது பேருந்தில்தான் பயணிக்க வேண்டுமென்று விரும்பி பலரும் செல்வதைப் பார்த்து வியந்திருக்கின்றேன். பயணம் முழுவதும் அவரது வர்ணனை கேட்டுக் கொண்டே இருக்கும். கூட்டத்தில் பிதுங்கிச் செல்லும் நகரப்பேருந்தின் நரகமான அனுவத்தைக் கூட ஒரு நடத்துநர் தனது நடத்தையால் இனிமையாக மாற்றுகின்றார் என்றால் அவர் அழகனாவரில்லையா?

அரசு மருத்துவராகப் பணியாற்றும் அவரது வீட்டு கிளினிக்கில் எப்போதும் கூட்டம் மொய்த்துக் கொண்டிருக்கும். நடுத்தர வர்க் கமும், ஏழைகளும் என எல்லாப்பிரிவினரும் அவரிடம் வருவார்கள். நோயைப் பற்றி தமிழில் விளக்கி, மருந்துகளின் ஆங்கிலப்பெய ருக்கு மத்தியில் அதன் பயன்பாட்டைத் தமிழில் எழுதி, என்ன சந் தேகம் கேட்டாலும் பொறுமையுடன் விளக்கி, எத்தனை பேர் வந் தாலும் சலிக்காமல் பணியாற்றுவார். அறுவைச் சிகிச்சை செய்ய அவசியமிருந்தால், பணமில்லாத மக்களை அரசு மருத்துவமனைக ளுக்கு வருமாறு கூறுவதோடு மட்டுமின்றி, வருபவர்களுக்கு உத வவும் செய்வார். பல ஏழைகளுக்கு ஒரு முறை மட்டும் கட்டணம் வாங்கிக் கொண்டோ இல்லை இலவசமாகவோ மருத்துவம்



படிப்பகம்

www.padippakam.com

பார்ப்பார். வார இறுதி நாட்களில் மட்டும் தனது சொந்த கிராமத் திற்குச் சென்று இன்றுவரை விடுபடாமல் வைத்தியம் பார்க்கின்றார். இல்லாமையினால் அரசு மருத்துவமனைக்கு வரும் மக்களைத் தனது தனியார் மருத்துவமனைக்கு வரவழைத்து கொள்ளையடிக்கும் மருத் துவர்கள் மத்தியில் இந்த மருத்துவரின் அழகுகிற்கு ஈடு இணையேது?

பிரபலமான அந்த உளவியல் மருத்துவர் ஒரு மக்கள் மருத் துவர். இத்தகைய சிறப்பு மருத்துவர்களை சந்திப்பதற்கான நேரத்தை தொலைபேசியில் பதிவுசெய்யும் இந்நாளில் அப்படி ஒரு வசதியை பணக்காரர்களுக்கு அளிக்காமல் நேரில் வருபவர்கள் எல்லோ ரையும் எத்தனை நேரமானாலும் இவர் சந்திப்பார். வசதியில்லாவர் களுக்கு குறைந்த கட்டணோமோ அல்லது இலவசமாகவோ சிகிச்சை அளிக்கும் இவர், தனக்கு விற்பனைப் பிரதிநிதி மூலம் வரும் மருந்துகளை பல ஏழைகளுக்கு கொடுப்பதையும் பார்த்திருக் கின்றேன். நாளொன்றுக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட நோயாளிகளின் சோகக் கதைகளைக் கேட்டு இன்முகத்துடன் பணியாற்றும் இவ ரிடம் சிகிச்சை பெறுவதற்கென்றே வெளி மாநிலங்கள் மற்றும் வெளியூர்களில் இருந்து பலர் வருவதைப் பார்த்து பிரமித்திருக் கின்றேன். இந்தப் பின்புலத்தில், பார்த்தவுடன் உள்ளத்தை அள்ளிக் கொள்ளும் இவரும் அழகானவரில்லையா?

ஏன் நமது பதிவுலகம் அறிந்த புருனோவையும் எடுத்துக் கொள்வோம். மற்ற மருத்துவர்களெல்லாம் தமது நேரத்தை ரூபாய் களில் அள்ளிக் கொண்டிருக்கும் போது இவர் மட்டும் தனது ஓய்வு நேரத்தை மருத்துவம் பற்றிய அறியாமையைப் போக்குவதற்காக வலைப்பூவில் ஒதுக்குகின்றார் என்றால் இவரைப் பார்க்காமலேயே நாம் நேசிக்கவில்லையா? சொல்லப்போனால் இதற்கு பிறகுதான் அவரை நேரில் சந்திக்க வேண்டுமென ஆர்வம் கூடுவது உண்மை யில்லையா?

கேரளாவிலிருந்து வந்திருக்கும் அந்த இளமையான டீ மாஸ் டரும் எனது அழகுப் பட்டியலில் உண்டு. நாளோன்றுக்கு பன்னி ரண்டு மணிநேரத்திற்கு மேலாக நின்றவாரே நூற்றுக்கணக்கான தேநீர் போடும் அவர் எவ்வளவு பரபரப்பாக இருந்தாலும் என்னைப் போன்ற தேநீர்ப் பிரியர்களைப் பார்த்ததும் தூள் மாற்றி, பாலை ஆற் றிவிட்டு மணத்துடன் எரிச்சல் காட்டாத சிரித்த முகத்துடன் தேநீர்



படிப்பகம்

www.padippakam.com

கொடுப்பார். நுரை பொங்கும் பாலுக்குப் போட்டியாக வியர்வை பொங்கும் இந்த மனிதர்கள் குறைவான சம்பளத்திலும் தனது தொழிலை அப்படி ஒரு ஈடுபாட்டுடன் செய்யும் அழகை நீங்களும் பல இடத்தில் கண்டிருப்பீர்கள்தானே?

ரசியப் புரட்சி கண்ட லெனினை வழக்கையாகப் பார்ப்பதுதானே அழகு? மரணப் படுக்கையில் இருக்கும் போதும் சோவியத் யூனியனின் விவசாயிகள் பிரச்சினைக்காகக் கட்டுரை எழுத முனையும் லெனினை நோய் காரணமாக பணியாற்றக் கூடாது என்று மருத்தவர்கள் தடை செய்கின்றனர். அப்போது ஒரு மருத்துவர் கூறுகிறார் ''வேலை செய்வதுதான் தோழர் லெனினைப் பிழைக்க வைப்பதற்கான மருந்து. அதைத் தடைசெய்தால் அவர் இறந்து விடுவார்''. தனது பள்ளி இறுதி நாட்களில் எழுதிய கட்டுரையொன்றில் தனது எதிர்காலத்தை மனிதகுலத்திற்குப் பணியாற்றும் வேலையில் கழிப்பதுதான் விருப்பமென்கிறார் காரல் மார்க்ஸ். ஏழ்மையின் காரணமாக குழந்தைகளுக்கு தேவையான பாலைச் சுரப்பதற்குக் கூட தனது மார்பகம் மறுக்கும் நிலையிலும் பாரிஸ் கம்யூனின் வெற்றியைத் தங்கள் குடும்பம் கொண்டாடியதை நண்பர் ஒருவருக்கு கடிதத்தின் மூலம் தெரிவிக்கின்றார் ஜென்னி மார்க்ஸ். இந்த தம்பதியினரிடம் வெளிப்படும் காதலும், அழகும் நமக்கு பொறாமையை ஏற்படுத்தவில்லையா?

மார்க்சின் மறைவுக்குப் பிறகு சர்வதேச கம்யூனிச இயக்க வேலைகளைத் தனியாக பார்க்கும் ஏங்கெல்ஸ் தனது முதுமையின் காரணமாக மார்க்சின் மூலதனம் நூலைச் செப்பனிட்டு வெளியிடும் பணி தள்ளிப் போவது குறித்து வருத்தப்படுகின்றார். இதற்காக தனது ஆய்வுப்பணிகளைக் கைவிடுகிறார். இந்த வெண்தாடிக் கிழவனது அழகைத் தரிசிப்பதற்கு உண்மையில் நாம் அருகதை உள்ளவர்கள்தானா?

விதிக்கப்பட்டிருக்கும் தூக்குத்தண்டனையால் தான் தனது பலவீனங்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பல்லாமல் மரித்துப்போகும் பாக்கியம் பெற்றவன் என்று மரணத்தின் அருகிலும் தன்னைப் பற்றிய சுயவிமரிசனத்துடன் எழுதும் 23 வயது பகத்சிங்கின் புகைப் படத்தைப் பார்க்கும்போது நாம் பெறும் உற்சாகத்திற்கு அளவேது? கியூபாவின் வெளியுறவு அமைச்சராக இருந்தாலும் தென் அமெரிக்கா முழுவதும் புரட்சி நடைபெற வேண்டுமெனக் கிளம்பி



படிப்பகம்

www.padippakam.com

பொலிவியாவின் காடுகளில் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப் பட்ட சே குவேராவின் புகைப்படம் எத்தனை இளைஞர்களுக்கு புரட்சியின் துடிப்பை அள்ளித் தந்தவாறு இருக்கின்றது? 90 வய திலும் தமிழனுக்கு சொரணை பற்றிய விழிப்புணர்வை எழுப்புவ தற்காக மூத்திரப்பையுடன் ஊர் ஊராக அலைந்தாரே பெரியார், அந்தத் தொண்டுக் கிழவனின் அழகிற்கு முன்னால் நாம் எல்லாம் எம்மாத்திரம்?

ஆம், அழகு என்பது நிலைக்கண்ணாடியில் பிரதிபலிப்பதல்ல. மற்றவர்களுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ளும் மனிதர்கள்தான் இதுவரை மனித சமூகம் கண்ட பேரழகு மனிதர்கள். நீங்கள் அழகுள்ளவரா என்பதை அறிந்துகொள்ள உங்கள் உருவத்தை சமூகக்கண்ணாடியில் பார்ப்பதற்கு முயலுங்கள். நம் அழகைத் தெரிந்து கொள்வதற்கு இதுதான் ஆகச் சிறந்த வழி!

•••



படிப்பகம்

www.padippakam.com

## உப்பிட்டவனை உடனே கொல்!

ஆப்கானிலும், ஈராக்கிலும் அப்பாவி மக்களைக் கொன்று வரும் அமெரிக்க பயங்கரவாதத்தை அறிந்திருக்கிறோம். குஜராத்திலும் இப்போது ஒரிசாவிலும் சிறுபான்மை மக்களை நரவேட்டையாடும் ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதத்தையும் இதன் எதிர்விளைவாகக் குண்டுகளை வெடிக்கச் செய்யும் இசுலாமிய தீவிரவாதத்தையும் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆனால் படித்தவர்களின் பயங்கரவாதம்? நாளிதழ்களின் மூலையில் சிறிய செய்தியாக வந்து போன இச்சம்பவத்தைப் படியுங்கள்.

கன்னியாகுமாரி மாவட்டத்தைச் சேர்ந்த அறுபது வயது ராமசாமி வங்கியில் மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது மனைவி ஒரு மகனுடன் சிங்கப்பூரில் வசிக்கின்றார். மற்ற மூன்று வாரிசுகளும் வெவ்வேறு நகரங்களில் வாழ்கின்றனர். ராமசாமி மட்டும் சென்னை தாம்பரத்தில் ஒரு அடுக்குமாடிக் குடியிருப்பில் தனது உடன்பிறந்தவரின் மகனான அருணுடன் வசித்து வந்தார். பிள்ளைகள், மனைவி அனைவரும் வெவ்வேறு இடங்களில் இருக்க, ராமசாமி பெரும்பாலும் தனியாகவ்வே வாழ்வைக் கழித்து வந்தார்.

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 24 வயது பெஞ்சமின் பெர்னார்டு ஊரிலேயே ராமசாமிக்கு அறிமுகமானவன். பி.எஸ்.சி கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்திருக்கும் இவனுக்கு சென்னையிலேயே ஒரு வேலையை ராமசாமி வாங்கித் தந்திருக்கின்றார். அச்சுதன் (24),



படிப்பகம்

www.padippakam.com

ராஜா டேவிட் (24) இருவரும் பெர்னார்டின் நண்பர்கள். மூவரும் தாம்பரத்திற்கு அருகேயுள்ள சேலையூரில் சேர்ந்து தங்கியிருக்கின் றனர். இதில் டேவிட் வங்கி ஒன்றில் வசூல் முகவராகவும், அச்சுதன் நகரத்தின் கல்லூரி ஒன்றில் எம்.எஸ்.ஸி படிக்கும் மாணவனாகவும் இருக்கின்றனர். இவர்கள் மூவரும் அடிக்கடி ராமசாமியின் வீட்டுக்கு சென்று வருவதும் உண்டு.

சென்னை போன்ற பெருநகரங்களில் வாழும் இதுபோன்ற இளைஞர்களுக்கு தேவைப்படும் முக்கியமான விசயம் பணம். விலையுர்ந்த உடைகளும், இரு சக்கர வாகனங்களும், மேட்டுக்குடி யினர் சங்கமிக்கும் உணவகங்கள், திரையரங்குகள், கேளிக்கைப் பூங் காக்கள் முதலானவற்றிற்கு செல்வதும் என எல்லாவற்றுக்கும் பணம் சற்று அதிக அளவில் தேவைப்படும். இவற்றைச் செலவழிப் பதற்கு அருகதை இல்லையென்றால் கேவலம் ஒரு சுமாரான பெண்ணின் நட்பைக்கூட கைப்பற்ற முடியாது. தன் வயதினை யொத்தவர்கள் இந்த ஆடம்பர வாழ்வை வாழும்போது அவற்றுக்கு வழியில்லாதவர்கள் அடையும் மன அழுத்தம் சற்றே அதிகம்தான். கண்ணெதிரே இன்பத்தை அளிக்கத் தயாராக ஒரு சொர்க்கம் காத்துக் கொண்டிருக்கும்போது அதில் நுழைவதற்கு அனுமதி இல்லை யென்றால் என்ன செய்வது?

இந்த மனப்போராட்டத்தில் தத்தளித்த நண்பர்கள் எப்படி யாவது இந்த சென்னை சொர்க்கத்தில் நுழைவது என்று கொள்கை முடிவெடுத்து விட்டார்கள். அதற்கு அவர்கள் வந்தடைந்த முடிவு பெரியவர் ராமசாமியைக் கொலை செய்து, வீட்டிலிருக்கும் நகை, பணத்தை அபகரிப்பது. கடந்த 19 ஆம் தேதி வெள்ளிக்கிழமை தங்கள் முடிவை அரங்கேற்றுவதற்காக ராமசாமியின் வீட்டிற்கு மூவரும் சென்றனர். ஆனால் அச்சுதனுக்கும், டேவிட்டுக்கும் சற்று தயக்கம் இருந்ததால் காரியம் கைகூடவில்லை. தங்கள் இருப்பிடத் திற்குத் திரும்பிய மூவரும் மீண்டும் விவாதித்திருப்பார்கள் போலும். கிடைக்கப்போகும் பணமும் அது தங்களுக்கு தரப்போகும் இன்பத் தையும் பெர்னார்டு விளக்கி இருவரையும் வசமாக்கியிருக்கக் கூடும்.

இந்த தெளிவிற்குப் பின்னர் அடுத்த நாள் அருண் அங்கு இல்லை என்பதை உறுதி செய்து கொண்டு மூவரும் மதியம் அந்தப் பெரியவர் வீட்டிற்குச் சென்றனர். மூவரையும் வரவேற்ற அந்தப் பெரியவர் தானே சமையல் செய்து சாப்பாடு கொடுத்தார். பணியாள் இன்றி தன்


படிப்பகம்

www.padippakam.com

பணிகளைத் தானே செய்து கொண்டு வாழும் அந்த மூத்த குடிமகனின் கையால் சாப்பிட்ட கையுடன் அந்தத் தருணத்திற்காகக் காத்திருந்தனர். இரவும் வந்தது.

அதுவரை கலகலப்பாகப் பேசிக்கொண்டு இருந்தவர்கள் நள்ளிரவை நெருங்கும் நேரம், பெரியவர் தொலைக்காட்சியை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கும்போது அதை அரங்கேற்றினார்கள். பெர்னார்டு ஒரு துண்டினால் ராமசாமியின் முகத்தை இறுக்கமாக மூடிக்கொள்ள, அச்சுதன் ஒரு சுத்தியலால் தலையில் ஓங்கி பலமுறை அடிக்க, என்ன ஏது என்று அறியாமலேயே ராமசாமி அமைதியானார். பின்னர் அவரைக் குளியலறையில் இழுத்துப் போட்டுவிட்டு எல்லா குழாய்களையும் திறந்து வைத்தனர். அப்போது அவரது கை மட்டும் துடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததும் டேவிட் ஒரு கத்தியால் அவரது தொண்டையை அறுத்து இயக்கத்தை முற்றிலுமாக நிறுத்தினான்.

பிறகு வீட்டிலிருந்த ரூ. 85,000 மதிப்பிலான நகைகளையும், ரூ. 35,000 ரொக்கப் பணத்தையும் எடுத்துக் கொண்டு அன்றிரவே நாகர்கோவிலுக்குச் சென்று விட்டனர். உடனே நகைகளை விற்றவர்கள் காசோலை மூலம் ராமசாமியின் வங்கிக் கணக்கிலிருந்த ஐந்து இலட்சத்தை சென்னை வந்து எடுப்பதற்கு திட்டமிட்டிருந்தார்கள்.

இந்தக் கொடூரமான கொலையை விசாரித்த போலீசு, முதலில் பெரியவருடன் தங்கியிருந்த அருணின் மேல் சந்தேகப்பட்டது. சம்பவம் நடந்த அன்று அருண் வேறொரு நண்பர் வீட்டிற்கு சென்றது தெரிய வந்ததோடு, பெர்னார்டும் மற்ற நண்பர்களும் அடிக்கடி வந்து போவதை அருண் தெரிவித்ததும் புலனாய்வுக்கு வழி பிறந்தது. குற்றவாளிகளும் பிடிபட்டார்கள். குற்றத்தையும், செய்த விதத்தையும் ஒப்புக் கொண்டார்கள்.

உயர்கல்வி கற்ற இந்த சமவயதினையொத்த இளைஞர்கள் தங்களின் குடும்ப நண்பரும் வயோதிகருமான ஒரு பெரியவரை ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்து பணத்தை திருடியிருக்கிறார்கள் என்பதை உங்களால் நம்ப முடிகின்றதா? இவர்கள் எவரும் தொழில்முறைக் குற்றவாளிகள் இல்லை. உச்சந்தலையில் சுத்தியலால் அடித்து மண்டை ஓட்டைப் பிளந்து ஒரு முதியவரை விகாரமாகக் கொல்லும் மனநிலையை இவர்கள் எங்கிருந்து பெற்றார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

எல்லாத் துறைகளிலும் வளர்ந்து வருவதாகச் சொல்லப்படும் இந்தியாவில், இப்பொது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பல பொருள்கள் வந்து விட்டன. ஐ போனும், பல நூறு வசதிகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளும், அதி நவீனக் கார்களும், நட்சத்திர விடுதிகளிலும், பண்ணை வீடுகளிலும் சனி, ஞாயிறு நடக்கும் நடன மது-மாது விருந்துகளும், இலட்சக்கணக்கான பொருள்களை அடுக்கி அழகு பார்க்கும் ஹைப்பர் மார்ட்டுகளும், நூற்றுக்கணக்கான வகைகளைக் கொண்ட காஃபி ஷாப்புக்களும், இலட்சங்களை அள்ளிக் கொடுக்கும் ஐ.டி துறையும் எல்லாமும் வந்துவிட்டன.

வாழ்வதற்காகப் பொருள்கள் என்பது போய் பொருள்களை நுகர் வதற்காக வாழ்க்கை என்றாகி விட்டது. விதவிதமான பொருள்களை நுகர்வதற்கு கற்றுக் கொண்ட நடுத்தர வர்க்கம் அதற்கேற்றவாறு மனித உறவுகளையும் மாற்றிப் போடுகின்றது. பொருள்களின் மேல் கொண்ட பாசம் மனிதர்களின் மேல் வருவதில்லை. வசதியான வாழ்க்கைக்கு ஏங்கும் மனது, அதற்காகச் சில உறவுகளைப் பலியிட வேண்டும் என்றாலும் அதற்குத் தயங்குவதில்லை.

பொருள்களைத் தர வக்கில்லாத உறவுகள் இரக்கமின்றி கைக ழுவப்படுகின்றன. வாழ்வில் முன்னேறுவதற்கு நேர்மையும், அறமும் தடையென்றால் அவற்றைத் தூக்கி எறிவதற்கு இன்றைய தலைமுறை தயங்குவதில்லை. அதே போல தனது முன்னேற்றத் திற்கு அநீதியான காரணங்கள் தடை செய்கின்றன என்றால் அதற்காக போராட்டப் பாதையை விடுத்து குறுக்கு வழிகளையே நாடுகின் றார்கள்.

படிப்பும் வசதியான வாழ்க்கையும் மட்டுமே நல்ல விழுமி யங்களை உருவாக்கி விடுவதில்லை. இன்றைய கிரிமினல்கள் ஆனந்த விகடன் சித்தரிக்கும் பெரிய மீசை வைத்த முரடர்கள் போன்று இருப்பதில்லை. அவர்கள் உயர் கல்வி கற்றவர்கள். பங் குச்சந்தை வர்த்தகமோ, ரியல் எஸ்டேட் வணிகமோ எதிலும் ஏமாற் றுவதற்கு அவர்கள் தயங்குவதில்லை. வாழ்வின் முன்னேற்றமே கிரிமினல் மயமாகி வரும்போது இளைய தலைமுறை இப்படி வக் கிரமான செயல்களுக்குள் இறங்குவதில் வியப்பில்லை. இது இந்தக் காலம் கற்றுக் கொடுக்கும் பண்பு. உலகமயமாக்கம் மேற்கில் குடி கொண்டிருந்த இந்த சமூக வன்முறைகளை - காப்பீட்டுத்



படிப்பகம்

www.padippakam.com

தொகையைப் பெறுவதற்காகக் குடும்பத்தினரையே கொலை செய்வது போன்ற இப்போது நிழக்கிற்கும் இறக்குமதி செய்திருக்கின்றது.

ஆயினும் கை நனைத்த வீட்டில் திருடக் கூடாது என்பது தொழில்முறைத் திருடர்கள் கூட கடைபிடிக்கும் 'தர்மம'. பிக்பாக்கட் அடிக்கும் திருடர்கள் கூட இத்தகைய கொடூரக் கொலைகளைச் செய்வதில்லை. கிரிமினல் தொழிலில் புதிய அறங்களை உருவாக்கியிருக்கும் இந்த இளைஞர்கள் யார்? சுருங்கக் கூறின் நம்மைச் சுற்றியிருப்பவர்களில் யார் கிரிமினல்கள் என்பதும், அவர்கள் எப்போது குற்றமிழைப்பார்கள் என்பதையும் நம்மால் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் அவர்கள் படித்தவர்கள்! சுற்றியிருக்கும் வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிக்க அவர்களுக்குத் தேவைப்படும் பணம் கிடைக்கவில்லையென்றால் அவர்கள் கொலை செய்யவும் அஞ்ச மாட்டார்கள். இனிய வாழ்வின் புதுமைகளைப் புதிய விளம்பரங்கள் போதிப்பதற்கேற்ப இவர்களது வெறியும் அதிகரிக்கும். அது எப்போது வெடிக்கும் என்பது தெரியாது.

நமத்துப் போன வாழ்வைச் சூடேற்றுவதற்கு தேவைப்படும் பணம், அவர்களுக்கு தேவை. அது கிடைப்பதற்காகக் குரல் வளையை அறுப்பார்கள் அல்லது குடலையும் உருவுவார்கள். இந்தப் படித்த தீவிரவாதிகளை அரசியல் தீவிரவாதிகளைப் போல முன்கூட்டியே கைது செய்வது நடக்கக் கூடிய காரியமா என்ன? ஆதலால் அடுத்த தீவிரவாதிகள் தங்கள் செயலை அரங்கேற்றுவதற்காகக் காத்திருப்பதைத் தவிர வேறு என்ன செய்வது?

•••



படிப்பகம்

www.padippakam.com

## கருகும் கனவுகள்!

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் வேலை செய்யும் இந்தியர்கள் கடந்த ஆறு ஆண்டுகளில் செய்து கொண்ட தற்கொலைக் கணக்கைப் பார்ப்போம். 2003-இல் 40, 2004-இல் 70, 2005-இல் 84, 2006-இல் 109, 2007-இல் 118, 2008 ஜூன் வரைக்கும் 79 பேரும் தற்கொலை செய்திருக்கின்றார்கள் (தி டைம்ஸ் ஆப் இந்தியா, 28.07.08). இந்த ஆண்டு தற்கொலை செய்தவர்களில் 23 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். மீதிப்பேர் கேரளா மற்றும் ஏனைய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். மொத்தத்தில் தமிழகம், கேரளாவைச் சேர்ந்தோரே கணிசமாக உள்ளனர். காரணம் வளைகுடா நாடுகளில் இவ்விரு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்தான் அதிகம். மேலும் இந்தப் புள்ளிவிவரம் ஒரு நாட்டிற்கு மட்டும்தான் என்பதால் ஏனைய வளைகுடா நாடுகளின் விவரங்களைச் சேர்த்தால் கணக்கு இன்னும் அதிகமாகும். வேலை செய்யும்போது விபத்தில் கொல்லப்படும் தொழிலாளர்களின் கணக்கு இதில் சேரவில்லை.

ஏழ்மையிலும், அவலத்திலும், வேலையின்மையிலும் இழுபட்டுச் செல்லும் வாழ்க்கையில் வானத்து நட்சத்திரமாக தூரத்தில் நமக்கொரு வாழ்க்கை உண்டெனும் நம்பிக்கையைத் துளிர்விடச் செய்வது வளைகுடா வேலைவாய்ப்புகள். தமிழகத்தின் படித்த நடுத்தரவர்க்கம் நகரத்து தகவல் தொழில்நுட்பத் துறையின் பசுமையைக் காணும் வாய்ப்பைப் பெற்றிருப்பதற்கு மாறாக படிக்காத வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும் உள்நாட்டில் நம்பிக்கையளிக்கும் வாய்ப்புகள் எல்லாம் பாலைவனமாகக் காய்ந்து கிடக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

காட்டு வெள்ளத்தில் இழுபட்டுச் செல்லும் வாழ்க்கையில் கரை சேறத் துரும்பில்லாத நிலையில் கிராமத்தில் ஓரிருவர் அரபு நாடுக்ளுக்கோ, மலேசியாவுக்கோ சென்றால் நம்பிக்கை துளிர்விடத் துவங்குகின்றது. சென்றவர்கள் அடைந்த சிரமங்கள் மறைந்து, கொண்டு வரப்போகும் அதிர்ஷ்டங்கள் மனதை ஆக்கிரமிக்கின்றன. அதற்கு மேலும் காத்திருக்காமல் வெளிநாடு செல்லும் ஆசை, கனவுலகிலிருந்து இறங்கி நனவைச் சாத்தியமாக்க முனைகின்றது. அந்த முயற்சியில் குடும்பமே தன்னை மறந்து எதிர்பார்ப்புடன் ஈடுபடுகின்றது. விளையாத துண்டுநிலத்தை விற்பது, குண்டுமணித் தங்கத்தைச் சேகரித்து அடகு வைப்பது, இறுதியில் பெருந்தொகையைக் கந்துவட்டிக்கு வாங்குவது என முயற்சிகள் தீவிரமடைகின்றன.

பிறகு அந்த நாளும் வருகின்றது. ஊர் கூடி வாழ்த்த .. குடும்பமே மகிழ்ச்சியில் திளைத்திருக்க விமானமேறி வெளிநாடு செல்கின்றார்கள். இதில் திருட்டு விசாவில் செல்கின்றவர்கள், சுற்றுலா விசாவில் போனவர்கள், கடவுச்சீட்டை அடமானம் கொடுத்து அல்லல்படுபவர்கள், இறுதியில் மலேசியச் சிறைகளில் சாட்டையடிபட்டு வாடுபவர்கள், அடுத்து எப்படியாவது இந்தியா திரும்பமாட்டோமா என்று தோல்வியுறுபவர்களின் கதையை விடுவோம். முறையான வழிகளில் சென்றவர்களாவது முழுநிறைவை அடைந்து தன் குடும்பத்தில் விளக்கேற்றுகின்றார்களா?

அரபு நாடுகளின் சம்பள விகிதம் முன்பைக்காட்டிலும் கணிசமாகக் குறைந்திருக்கிறது. குறைந்த சம்பளத்தில் வேலை செய்வதற்கு ஏனைய தெற்காசிய நாடுகளின் பஞ்சப் பராரிகள் தயாராக இருப்பதால் 80களின் பொற்கால வளைகுடாப் பணி இன்று இல்லை. இந்த உண்மை அங்கு சென்ற பிறகே தொழிலாளர்களுக்கு புரிய வருகின்றது. இருந்தாலும் கடந்த காலத்தின் எச்சம் மனதில் வேர் விட்டிருப்பதால் அரபு மயக்கம் குறைந்தபாடில்லை.

மற்ற தற்கொலைகளுக்கும் வளைகுடாவில் நடப்பதற்கும் பாரிய வேறுபாடு இருக்கின்றது. அவல வாழ்வில் மகிழ்ச்சியையும், புதிய வாசல்களையும் ஒரு பண்புமாற்றம் போல திறக்கச் செய்ய வேண்டிய இந்தக் கனவு மொட்டிலேயே கருகுவது ஏன்? கடன் ஏற்படுத்தும் நெருக்கடியும், குடும்பத்தின் எதிர்பார்ப்பும்தான் காரணங்கள். வெளிநாடு செல்வதற்கு விசா எடுக்க, போக்குவரத்து,


படிப்பகம்

www.padippakam.com

தரகர் கழிவு என்று சில இலட்சங்களைச் செலவு செய்யக் கை கொடுப்பது கந்துவட்டிக் கடன்தான். இந்தக் கடனை அடைக் குமளவு வெளிநாட்டின் வேலையும் சம்பளமும் அமைவதில்லை. கிடைக்கும் சம்பளத்தில் பாதியை தங்குமிடம், உணவு போன்றவற் றிற்காக நிறுவனங்கள் பிடித்துக் கொள்கின்றன. தனியாகத் தங்கி னாலும் கால் வயிற்றுக் கஞ்சி மட்டும் குடித்துக் கொண்டு ஓட்டி னாலும் செலவு குறைவதாயில்லை. சில வருடங்கள் பல்லைக் கடித்துக் கொண்டு ஓட்டிவிட்டால் நிச்சயம் வழி பிறக்குமெனத் தொழிலாளிகள் காத்திருக்கின்றனர்.

இடையில் இந்தக் கஷ்டங்களை அறியாத குடும்பத்தினர் எதிர் பார்ப்புகளைத் தெரிவித்தவாறு நெருக்குகின்றனர். தங்கையின் திரு மணம், தம்பியின் படிப்பு, சொந்த வீடு கட்டுவது, மனை வாங்கிப் போடுவது, எல்லாவற்றுக்கும் மேல் வெளிநாடு செல்ல வாங்கிய கடனை அடைக்க வேண்டிய நிர்ப்பந்தம் எல்லாம் சேர்ந்து கெடு விதிக்கின்றன. இந்த அழுத்தத்தில் தத்தளிக்கும் தொழிலாளிகள் எதிர்காலத்திலாவது நல்ல சம்பளம் கிடைக்கும் என்று அரபு நாடுக ளிலேயே கடன் வாங்குகின்றனர். நிறுவனத்தில் கொத்தடிமை போல வாழ்வேன் என்று ஒப்பந்தம் போட்டுக் கொண்டு முன்பணம் வாங்குகின்றனர். வங்கிகளில் கடன் கிடைக்கவில்லை என்றால் கடன் அட்டைகளை வாங்குகின்றனர். அதுவும் போதாது எனும்போது கந்து வட்டிக்கு கடனும் வாங்குகின்றனர். ஊர்ப்புறங் களில் குடிகொண்டிருக்கும் கந்துவட்டி கடல் கடந்தும் ராஜ்ஜியத்தை விரித்திருக்கின்றது.

எனினும் இந்த ராஜ்ஜியத்தில் அடிமைகளுக்கு கதிமோட்சம் இல்லை. எதிர்பார்த்த வாழ்வு இனி கிடைக்கப் போவதில்லை எனும் அவல யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளும் தொழிலாளிகள் அதற்கு விடைதேடும் முகமாகத் தமது உயிரைத் துறக்கும் துணிச்சலான முடிவை நோக்கித் தள்ளப்படுகின்றார்கள். பொறுப்புணர்வோடும், வீட்டிற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற பாசமும் நிறைந்தி ருக்கும் இந்தத் தொழிலாளிகள் எவ்வளவு மன உளைச்சலுடன் இந்த முடிவை எடுத்திருப்பார்கள்? கடல் கடந்து தீர்வு தேடிய கனவு இடை யிலேயே கருகிப் போகின்றது. மகன் வழி திறப்பான் என்று ஆவ லுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பம் செய்வதறியாது திகைத்து நிற்கின்றது. ஆயினும் இந்த சோக முடிவுகள் ஊருக்குள்


படிப்பகம்

கருக்கொண்டிருக்கும் வெளிநாட்டு மோகத்தைக் கலைத்து விடுவதில்லை.

அமெரிக்காவின் கணிப்பொறி நிறுவனங்களுக்காக இலட்சங்களில் சம்பளம் வாங்கச் செல்லும் மேட்டுக்குடியினருக்கு எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்யும் அரசு வளைகுடாவின் தொழிலாளிகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. விபத்திலோ, தற்கொலையிலோ இறந்துபோகும் தொழிலாளிகளின் பிணங்கள் தாய்நாடு வருவதற்கே சில வாரங்கள் ஆகிவிடுகின்றது. இதற்கான நிவாரணத் தொகையை நிறுவனங்களிலிருந்து வாங்குவதற்குக் கூட வளைகுடாவிலிருக்கும் இந்தியத் தூதரகங்கள் உதவுதில்லை. வாழ்ந்த போதும், வாழ்வு முடிந்தபோதும் மதிப்போ, மரியாதையோ ஏழைகளுக்கு இல்லை. மொத்தத்தில் வளைகுடாக் கனவுகளின் மறுபக்கம் இதுதான்.

சலிக்காமல் கனவுகளை ஏற்றுமதி செய்யும் தமிழகத்தில் வாழ்க்கை எப்படி இருக்கிறது? விதவைகள் வாழ்வுரிமை இயக்கம் எனும் அமைப்பு துவங்கியுள்ள கலங்கரை என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் குறிப்பிட்டுள்ள ஒரு ஐ.நா சபையின் ஆய்வுப்படி இந்தியாவில் 15 முதல் 59 வயதுவரை உள்ள பெண்களில் ஆயிரத்தில் 53 பேர் விதவைகளாம் (குமுதம் ரிப்போர்ட்டர், 17.7.08). தமிழ்நாடு, புதுச்சேரியில் மட்டும் இந்த விகிதம் நூற்றுக்கு ஏழு பேராம். அதன்படி ஆயிரத்திற்கு எழுபது பேர். நாட்டிலேயே விதவைகளின் விகிதம் தமிழ்நாட்டில்தான் அதிகமாம். இந்த அதிக விதவை விகிதத்திற்கு என்ன காரணம்?

தமிழ்நாடு குடிகாரர்களின் தேசமாக மாறிவருவதுதான் இந்த நிலைக்கு காரணம். டாஸ்மாக் விற்பனையின் மூலம் தமிழக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 9,000 கோடி ரூபாய் வருமானம் வருகின்றது என்றால் குடிப்பவர்களின் எண்ணிக்கையையும், குடியின் அளவையும் ஊகித்தறியலாம். நகரமயமாக்கம் உருவாக்கியிருக்கும் புதிய உடலுழைப்பு வேலைகள் காரணமாக உதிரிப் பாட்டாளிகள் அன்றாடம் பெறும் கூலியில் கணிசமான அளவை சாராயக்கடையில் அள்ளிக் கொடுக்கின்றனர். மிதமாக ஆரம்பிக்கும் குடிப்பண்பு பின்பு மிதமிஞ்சியதாக மாறி குடிக்கு அடிமையாக மாற்றி விடுகின்றது.

எனவே இந்தப்பிரிவினர் 40, 50 வயதுகளில் கல்லீரல் கெட்டு மரணத்தைத் தழுவுகின்றனர். இம்மக்கள் பார்க்கும் கடின உழைப்பு

www.padippakam.com

வேலைகளால் ஏற்படும் உடல் சோர்வை மறக்கக் குடித்தே ஆக வேண்டும் என்ற நிலையை உருவாக்கியிருப்பதும் உண்மைதான். குடிக்கும் நடுத்தரவர்க்கம் போதிய உணவை எடுத்துக்கொள்வ தாலும், அவர்களுக்கு கடின உழைப்பு வேலைகள் இல்லை என் பதோடு குடியும் அளவுக்குட்பட்டு இருப்பதாலும் இளவயது மரணம் இவர்களிடத்தில் பொதுவில் இல்லை. ஆனால் உழைக்கும் வர்க்கமோ சத்தான உணவைச் சாப்பிட வாய்ப்பில்லாமலும், இருக்கும் காசைக் குடியில் கொட்டுவதாலும் மரணம் வாசலைத் தட் டுகின்றது. ஆக திருமணம் ஆன பெண்கள் இளம் வயதிலேயே வித வையாகின்றார்கள்.

விதவைகள் மற்றவர்களைப் போல வாழ்வதும், மறுவாழ்வு பெறுவதும் இயல்பாக முடியுமென்ற நிலை இன்னும் வரவில்லை. விதவைகளைப் புறக்கணிக்கும் பிற்போக்குச் சமூகமாகவே தமி ழகம் நீடிக்கின்றது. புத்தாடை அணிந்தாலே மினுக்கிக் கொண்டு திரி கிறாள் என்று பேசுவதும், மங்கல நிகழ்ச்சிகளில் ஒதுக்குவதும் இன்றும் சமூகத்தில் சாதாரணம்தான். அவ்வளவு ஏன் மேற்கண்ட விதவைகள் சங்கம், கூட்டம் நடத்துவதற்குக்கூட பல திருமண மண்டப உரிமையாளர்கள் புனிதத்தைக் காரணம் காட்டி அனுமதி மறுத்து விட்டனராம்.

பெண்கள் கைம்பெண்களாவதும், வளைகுடாத் தொழி லாளர்கள் தற்கொலை செய்வதும் நாளிதழ்களின் செய்தியலைகளில் ஒதுங்கிவிட்ட இருபிரிவினரின் வாழ்க்கை மட்டுமல்ல. அதன் சங் கிலித் தொடர் வாழ்க்கையில் அல்லல்படும் மக்கள் ஏராளம் இருக் கின்றனர். தோல்வியும், விரக்தியும், சலிப்பும், சோர்வும் இன்னபிற சோகங்களையும் ஏற்றுக்கொண்டு வாழ்வதற்கு பழக்கப்படுத்தப் பட்ட மக்கள் வாழும் நாட்டில் ''இந்தியா முன்னேறுகிறது, வல்லர சாகிறது'' என்று சொல்வது சிரமம் இல்லையே?

•••



படிப்பகம்

www.padippakam.com

## இது காதலா? கள்ளக்காதலா?

தமிழகத்தின் தேனீர்க் கடைகளில் வாங்கப்படும் தினத்தந்தியில் தினமும் கள்ளக்காதல் குறித்த செய்தியும் ஒரு கொலையும் வாசகர்களால் அதிகம் படிப்பதற்கென்றே இடம் பெற்றிருக்கும். கள்ளக்காதல் தோற்றுவிக்கும் கிளுகிளுப்புக்களில் இருந்து படித்தவர் முதல் பாமரர் வரை தப்புவதில்லை. பரபரப்பலும் கவர்ச்சியிலும் நிலைகொள்ளும் சிந்தனை அதில் கவிந்திருக்கும் குடும்ப உறவின் துயரம் பற்றி ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. கள்ளக்காதல் செய்தியில் ஊடுறுவும் ஆண்மனம் தன்னையும் அந்தக் காதலனாக கற்பனை செய்யவும் தவறுவதில்லை.

அப்படியானால் படிப்பவர்களிடமும் வாழ்க்கை என்பது சலித்துப் போய் வேறு உறவுகளுக்கு ஏங்குகின்றது என்று இதைப் புரிந்து கொள்ளலாமா? விதிக்கப்பட்டிருக்கும் வாழ்க்கை உறவு எந்த அளவுக்கு கசக்கின்றதோ அந்த அளவுக்கு கள்ள உறவு வாசகருக்கு கிளுகிளுப்பூட்டுகின்றது. கூடவே ஒரு ஆணின் தடையற்ற பாலுறவுப் பசி அல்லது வெறி இந்தச் செய்தியினூடாக வெளிப்படுகின்றது. இருப்பனும் ஒரு பெண்ணைப் பொறுத்தவரை கள்ளகாதல் என்பது கணநேர மகிழ்ச்சி. இறுதியில் கொலையில் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி இடப்படுகின்றது.

இதுவும் செப்டம்பர் 24, 2008-இல் நக்கீரனில் வெளிவந்த ஒரு செய்திதான். சேலம் ஆத்தூர் அருகே பெத்தநாயக்கன் பாளையம்



படிப்பகம்

www.padippakam.com

கிராமத்தைச் சேர்ந்த பொன்னம்மாள் தனது கணவன் ஆறுமுகத்தை கழுத்தை நெறித்துக் கொலை செய்து விடுகின்றாள்.

இதைப்பற்றி ஊர் என்ன சொல்கின்றது? ''அவளுக்கு 38 வயசுன்னு சொன்னா யாராலும் நம்ப முடியாது. வயசுப் பொண்ணு போலத்தான் வாளிப்பா போவா, வருவா. அவளோட சுண்டியிழுக்கிற கண்ணுக்கு சொக்கிப் போய் சுத்துற பசங்க... 18 வயசுலயும் கூட இருக்கானுங்கன்னா பார்த்துக்குங்களேன். இவ்ளோ அழகிருந்து என்ன பரயோசனம்? புருஷன் மகா குடிகாரன். அதுவே ஆறுமுகத்தோட உயிரை எடுத்துடுச்சு. இப்ப இவளையும் போலீசு படிச்சுட்டு போயிடுச்சு''.

38 வயதில் மற்றவர்கள் ரசிக்கும் வண்ணம் பொன்னம்மாள் மினுக்கியவாறு இருந்ததை ஊர் வெளிப்படையாக ரசிக்கவில்லை. ஒரு கிராமத்துப் பெண் அழகிப்போட்டிக்குத் தேவையான ஒப்பனை எதுவும் செய்வதில்லை. இருப்பினும் அவளது சாதாரண அலங்காரமும் அழகும் ஊரின் கண்களை சுண்டி இழுக்கின்றது. ஒரு பெண் நடத்தை சரியில்லை என்பதைத் தெரிவிப்பதற்கு ஊர் பயன்படுத்தும் முதல் வாதம் அவள் அழகாகச் சிங்காரித்துக் கொள்கின்றாள் என்பதுதான். மேலும் அந்த அழகை 'ஊர்' உள்ளுக்குள் இரசிப்பதும், வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில் பயன்படுத்திக் கொள்வதும், முடியாத போது புறளி பேசி ஆதங்கத்தைத் தீர்த்துக் கொள்வதும் வழக்கம்.

பொன்னம்மாளைக் கைது செய்த இன்ஸ்பெக்டர் உத்ரபதியின் வாக்குமூலம் இது: ''என் புருஷன் குடிச்சுட்டு வந்து தானே கழுத்தைத் துண்டால் இறுக்கி தற்கொலை பண்ணிக்கிட்டாருனு'' சொல்லி அழுதாள்.

எங்களுக்கு இது சந்தேகம் தர, விசாரிச்சப்போதான் நாராயணனோட இருந்த கள்ளக்காதல் உறவு தெரிய வந்தது. ''இவளுக்கு மகன் ஒண்ணு, மகள் ஒண்ணு இருந்து இருவருக்கும் கல்யாணம் செஞ்சு வச்சப்புறமும் இவள் கள்ளக்காதலை விடலை. இதை அவள் புருஷன் தட்டிக் கேட்கவும் கொன்னுருக்காள்''.

போலீசுக்கு வழக்கு முடிந்த நிம்மதி. குற்றவாளியைக் கண்டுபிடித்து, முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து வழக்குப் போட்டு தண்டனை வாங்கிக்


படிப்பகம்

www.padippakam.com

கொடுத்தால், அவர்களின் பணிப் பதிவேட்டில் மதிப்புப் புள்ளிகள் ஏறும். பதவி உயர்வுக்குப் பயன்படும். மற்றபடி ஒரு பெண்ணின் வாழ்க்கை அத்துடன் முடிந்து விட்டது என்பது அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல. அடக்குமுறை எந்திரங்களின் ஈரமற்ற இதயங் களில் உயிருள்ள வாழ்க்கையின் வலியும், அது தோற்றுவிக்கும் அவ லமும் கடுகளவு கூட இறங்குவதில்லை.

நெடுங்காலம் தன்னை சித்திரவதை செய்த பிரச்சினையிலிருந்து விடுதலையையும், ஆனால் அடுத்து என்ன நடக்கும் என்பதறியாத இறுக்கமும் கலந்த வெளிறிப் போன முகத்துடனும் காவல் நிலை யத்தில் இருக்கும் பொன்னம்மாள் தனது கருத்தை நிருபரிடம் கூறு கின்றாள்.

அவளது முதல் கேள்வியே ''ஊரே கள்ளக்காதல்னு சொல்லி திட்டுறாங்க. காதல்லெ, கள்ளக்காதல்... நல்ல காதல்னு இருக்கா என்ன? ஏன் ஒரு பொம்பளை கொலை செய்ற அளவு போறானு யாராவது யோசிச்சு பார்த்தீங்களா?''

பதினைந்து வயதில் ஆறுமுகத்தை திருமணம் செய்த பொன்னம் மாளுக்கு இன்று ஒரு மகனும், மகளும் இருக்கின்றார்கள். அவர்க ளுக்கும் திருமணமாகி குழந்தைகளும் உண்டு. முப்பத்தி எட்டு வயதில் பாட்டி ஸ்தானத்தை அடைந்து விட்ட பொன்னம்மாள் இத்தனை ஆண்டுகளாக தனது குடிகாரக் கணவனால் தினமும் கொடு மைகளையே சந்தித்திருக்கின்றாள். மரம் ஏறிப் பழைக்கும் ஆறு முகம் 50 ரூபாய் கிடைத்தாலும், 500 ரூபாய் கிடைத்தாலும் குடித்தே அழித்து விடுவான். குடித்து விட்டு வீட்டுக்குவரும் அவன் பொன் னம்மாளை நிர்வாணமாக்கி கண்ட இடங்களில் அடிப்பதும், மிருகம் போல வல்லுறவு வைத்துக்கொள்வதும் தினசரி வாடிக்கை. பேரன், பேத்தி எடுத்தபறகும் இந்தக் கொடுமை தொடர்ந்தது.

இந்த விஷச்சூழலில் மாட்டிக்கொண்ட பொன்னம்மாள் அன் புக்கும், பாசமான தாம்பத்திய உறவுக்கும் ஏங்கினாள். வயது குறைந் தவளென்றாலும், மற்ற ஆண்கள் பார்வையை வசீகரிக்கும் அழ குள்ளவள் என்றாலும் நெடுங்காலம் ஒழுக்கமாகத்தான் வாழ்ந்து வந்தாள்.

ஆறுமுகத்தின் தொடர் சித்திரவதை இந்த ஒழுக்கவேலியை தாண்டுமாறு தூண்டியது. தற்செயலாக நாராயணன் என்பவனது



படிப்பகம்

www.padippakam.com

நட்பு கிடைத்தது. அவனுக்கும் குடும்ப வாழ்வில் நிம்மதியில்லை என்பதால் இந்த நட்பு பரஸ்பரம் தங்களது துன்பத்தைப் பரிமாறிக் கொண்டு தேவையான இன்பத்தையும் பகிர்ந்து கொண்டது. இளம் வயதில் தாயாகி, பாட்டியாகி, கணவனின் வெறிக்கும், அடிக்கும் வாழ்க்கைப்பட்ட பொன்னம்மாள் இந்தக் 'கள்ள' உறவில்தான் அமைதியையும் மகிழ்ச்சியையும் கண்டிருக்கின்றாள். நீண்டகாலம் புரையோடிப் போயிருந்த புண்ணுக்கு அது மருந்து. திருட்டுத்தனமான மருந்தென்றாலும் ஆறுதலைத் தரும் மருந்து.

ஒரு நேரம் நாராயணனுடன் ஓடிப்போகலாம் என்று திட்டமிட்டு இருபது நாட்கள் அசலூரில் வாழ்ந்தாள். இருப்பினும் தனது பள்ளைகள், பேரப்பள்ளைகளை மனதிற்கொண்டு இனி ஒழுக்கமாக வாழ்வோமென ஊருக்குத் திரும்பனாள். எல்லா சுகமும் இருபது நாட்களோடு போகட்டுமென முடிவெடுத்து வாழத் துவங்கினாள். ஆனால் ஆறுமுகம் திருந்துவதாயில்லை. பிள்ளைகள், மருகப்பிள்ளைகள் முன்பே அவளை அடிப்பதும், உறவுக்கு அழைப்பதும் என வாடிக்கையைத் தொடர்ந்தான். பொன்னம்மாளின் கள்ள உறவைப் பற்றி ஊர் பேசத்துவங்கியதும் ஆறுமுகத்தின் கொடுமைகள் அதிகரித்தன. தன் மனைவி இன்னொருவனுடன் உறவு வைத்திருக்கின்றாள் என்ற அதிர்ச்சியெல்லாம் ஆறுமுகத்திடம் ஏற்படவில்லை. அவளைப் பொறுத்தவரை அடிப்பதற்கு ஒரு முகாந்திரம் கூடுதலாகக் கிடைத்தது அவ்வளவுதான். பொன்னம்மாளும் தனது கணவனுக்கு தெரிந்து விட்டது குறித்து கவலை கொள்ளவில்லை. அன்புக்குப் பதில் வன்மத்தையும், வெறுப்பையும் கொட்டி வந்த அவனை அவள் எப்போதோ தன் மனதிலிருந்து அகற்றி விட்டாள்.

''போன செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியிருக்கும். குடிச்சிபுட்டு வாயை பொளந்து தூங்கிக்கிட்டு இருக்கான். எனக்கும் தூக்கம் வராம அவனையே வெறிச்சி பார்த்தேன். ஏதோ வெறி வந்துடுச்சு. மெல்ல கட்டிலருகே போயி அவன் கழுத்துல இருக்கிற துண்டை இறுக்கினேன். துடியா துடிச்சான். அவன் என்னை படுத்துன கொடுமைக்கு முன்னாடி அவன் துடிப்பு பெரிசா தெரியலை. ரெண்டு கையாலேயே இறுக்கி கொன்னேன். என் இத்தனை வருஷ தாகம் நாராயணனோட சேர்ந்தப்ப தீர்ந்தது. இத்தனை வருட வெறி ஆறுமுகத்தோட கழுத்தை இறுக்கி கொன்னப்போ தீர்ந்தது. 23 வருஷ சிறையில இருந்து மீண்டுட்டேன். இனி தனியா படுத்தாலும் நிம்மதியா படுப்பேன்.'' நிம்மதிப் பெரு



படிப்பகம்

www.padippakam.com

மூச்சோடு நிருபரிடம் பகிர்ந்து கொண்ட பொன்னம்மாள் சிறைச்சாலை நோக்கி பயணமாவதற்கு காத்திருக்கின்றாள்.

நடந்த கொலையை அவளே ஒத்துக் கொண்டிருப்பதால் வழக்கு விசாரணை வேகமாக நடந்து அவளுக்கு அநேகமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம். அப்படி விதிக்கப்பட்டால் குறைந்தது பதினைந்து வருடம் சிறையில் இருக்க வேண்டும். 53 வயதில் விடுதலையடைவாள்.

ஆறுமுகத்தை பொன்னம்மாள் கொலை செய்தாளா, அல்லது தண்டனை கொடுத்தாளா? பொன்னம்மாள் இப்போது விடுதலை அடைந்து விட்டாளா, அல்லது சிறைக்கு செல்கின்றாளா? இப்போது அவளுக்கு ஆயுள் தண்டனை முடிந்து விட்டதா, அல்லது தொடங்கப் போகின்றதா? இறுதியாக... இது காதலா, கள்ளக் காதலா?

●●●



படிப்பகம்

www.padippakam.com

## காதலைத் தீர்மானிப்பது அப்பியரன்சா, அப்ரோச்சா, அரிவாளா?

விஜய் தொலைக்காட்சியின் நீயா நானா நிகழ்ச்சியில் காதலுக்கு தேவை தோற்றமா, அணுகுமுறையா (அப்பியரன்சா, அப்ரோச்சா) என்ற தலைப்பில் காதலர்கள், காதலித்து மணந்தவர்கள், காதலிக்கக் காத்திருக்கும் இளைஞர்கள், இளம் பெண்கள் எல்லோரும் மனம் திறந்து ஒரு மாதிரியாக விவாதித்தார்கள்.

தோற்றத்தில் என்ன பிடிக்கும், பிடிக்காது வகையறாக்களைப் பட்டியலிட்டவர்கள் அழகு, தலைமுடி, சீரான பல், நடுத்தர உயரம், உடை நிறம், உடல் வண்ணம், உடை வகைகள் முதலானவற்றை அலசினார்கள். அடுத்து அணுகுமுறையைப் பட்டியலிட்டவர்கள் அசடு வழியாமை, எதிர்ப் பாலினரை ஆதிக்கம் செய்யாமை, எதிர்ப்பாலினர் மீது உரிமை எடுத்துக் கொள்வது - கொள்ளாமை என என்னவோ பேசினார்கள். பெண் சுதந்திரம் குறித்து தனது விருப்பப்படி உடை அணிவது, பேருந்தில் செல்வது, நண்பர்களிடம் பேசுவது, கேட்டதை வாங்கிக் கொடுப்பது, தன்னை அன்புடன் கவனிப்பது.. இன்ன பிறவற்றை அடுக்கினார்கள். இப்படி ஒரு மணிநேரத்தில் காதலை அலசிவிட்டு காதலைப் பெண்களிடம் எப்படித் தெரிவிப்பது என்று பார்வையாளர்களை வைத்தே நடித்துக் காட்டினார்கள். மொத்தத்தில் காதலும், பெண்ணுரிமையும் ஒரு மணி நேரமாகப் படாதபாடு பட்டது என்றால் மிகையல்ல.


படிப்பகம்

www.padippakam.com

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு இளைஞர் காதலிப்பது இவ்வளவு சுலபமா என்று ஆச்சரியப்பட்டு உடனே ஒரு பெண்ணைத் தெரிவுசெய்து கணக்கு பண்ணுவதற்கு திட்டமிடும் சாத்தியமும் உண்டு. இந்த ஜிகினா காதலைத்தான் பத்திரிகைகளும், காதலர் தினக் கொண்டாட்டங்களும் வருடா வருடம் போதித்து வருகின்றன. இந்திய நடைமுறையில் இந்த சரிகை வேலைப் பாடுகள் எவையும் செல்லுபடியாவதில்லை. உண்மையில் காதலிக்க வேண்டுமென்றால் பல தடைக்கற்களைக் கடக்க வேண்டும். காதலின் உயிராதாரமான இந்தப் பிரச்சினைகளின்பால் சினிமாவும், ஊடகங்களும் கவலை கொள்வதில்லை. காதல் டூயட்டுக்காக வெளிநாடு செல்லும் இயக்குநர்கள் எவரும் இந்த மண்ணின் உண்மைக் காதலை அதன் வலியை அறிந்து கொள்வதில்லை.

சாதி மதம் மாறி, ஜாதகம் பார்க்காமல், பெற்றோர்-உற்றாரை எதிர்த்துக் கொண்டு, மணம் செய்வது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. இதில் சமரசம் செய்து கொண்டு பெற்றொர் வழி திருமணம் செய்தவர்களே இங்கு அதிகம். அவர்களுக்கெல்லாம் காதல் விருப்பமற்றது என்பதல்ல, காதல் நடைமுறையில் சாத்தியமல்ல என்ற சமூக நிர்ப்பந்தமே காரணம். காதலிப்பவர்களும் கூட இந்தத் தடைக்கற்களைத் தாண்டுவதை விட சமரசம் செய்து கொண்டு குறுக்கு வழியைத் தேடுகின்றார்கள். சாதி, மதம் மாறாமல் காதலிப்பது, தனது சாதியின் தரத்தினையொத்த சாதியில் காதலிப்பது, கீழ் சாதியைத் தவிர்ப்பது, தனது வர்க்கநிலைக்கேற்ப காதலிப்பது, காதலித்தாலும் ஜாதகப் பொருத்தம் பார்ப்பது, பெற்றோருக்காக வரதட்சிணை கேட்டு காதலியை நிர்ப்பந்திப்பது, தாய் தந்தை விருப்பத்திற்காகக் காதலியை வேலையை விடச்செய்து, வீட்டு விலங்காக நடத்துவது, பிறக்கும் குழந்தைகளை தந்தையின் சாதி அடையாளத்துடன் வளர்ப்பது, இருவரில் யார் மேல்சாதியோ அவர்களது சாதியப் பண்பாட்டைக் கடைபிடிப்பது .. இங்கே காதல் எங்கே இருக்கின்றது?

இவ்வளவு பிற்போக்கு அழுக்குகளை அகற்றாமல், இதைப் பற்றி பேசாமல் காதலுக்கு தேவை தோற்றமா, அணுகுமுறையா என்று விவாதிப்பது அயோக்கியத்தனமில்லையா? தான் விரும்பிய உடைகளை அணிவதுதான் பெண்ணுக்கு சுதந்திரம் என்று



படிப்பகம்

www.padippakam.com

பிதற்றுவது அக்கிரமமில்லையா? இந்தியாவில் காதலுக்கு தேவைப் படுவது போராட்டமும், கலகமும்தான். இந்த உண்மையை ரத்து செய்யும் ஊடகங்கள் காதலை மின்மினிப் பூச்சி போல உணர்த்து கின்றன. இருண்டு கிடக்கும் சமூக இருட்டை இச்சிறிய ஒளி அகற் றுவதில்லை. மேம்போக்கான காதல் நடவடிக்கைகள் பெருநகரங் களில் வேண்டுமானால் சாத்தியமாகலாம். இதிலும் ஜாலிக்காகக் காதல், செட்டிலாவதற்கு பெற்றோர் நிச்சயிக்கும் திருமணம் என்பதே வழக்கமாக நடக்கின்றது. ஆனால் சிறு நகரங்களிலும், கிரா மங்களிலும் காதல் என்பது இன்னமும் அபாயகரமாகவே உள்ளது. டெக்கான் குரோனிக்கிள் செய்தித்தாளில் 10.09.08 அன்று வந்த ஒரு துயரக்காதல் சம்பவம் இதைக் கண்ணீருடன் தெரிவிக்கின்றது.

தஞ்சை மாவட்டம் அரித்துவார் மங்கலத்தைச் சேர்ந்த சிவாஜி எனும் 32 வயது தலித் இளைஞரும், அம்மா பேட்டைக்கு அருகில் வாழும் கள்ளர் சாதியைச் சேர்ந்த 29 வயது லட்சுமியும் காதலிக்கி றார்கள். தஞ்சை மாவட்டத்தின் அரசியல், சமூக வாழ்க்கையில் கோலோச்சும் கள்ளர் சாதி அவ்வட்டாரத்தில் பிரபலமான ஆதிக்க சாதியாகும். ஒரு கள்ளர் சாதிப் பெண்ணை அதுவும் ஒரு தலித் இளைஞன் திருமணம் செய்வது என்பது அங்கே நிலநடுக்கத்திற்கு ஒப்பானது. விசயம் வெளியே தெரிந்தால் தஞ்சையே சாதி வெறியால் கொந்தளித்துக் குமுறும். இச்சூழ்நிலையில் இக்காத லர்கள் எவ்வளவு சிரமங்களோடும், அச்சத்தோடும், இரகசியமா கவும் காதலித்திருப்பார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

காதலிப்பதற்கே இவ்வளவு சாகசம் தேவைப்படும்போது திரு மணம் என்பதை அங்கே கற்பனை கூடச் செய்ய முடியாது. இந் நிலையில் காதலர்கள் வேறுவழியின்றி தமது பெற்றோர், உறவி னர்கள் அறியா வண்ணம் திண்டுக்கல்லில் இருக்கும் ஒரு மாரி யம்மன் கோவிலில் திருமணம் செய்து கொண்டு அங்கேயே வாழ் கின்றனர். சிவாஜி ஆட்டோ ஓட்டுநராகப் பிழைப்பு நடத்தி இல்ல றத்தை நடத்துகிறார்.

தஞ்சைக்கும், திண்டுக்கல்லுக்கும் தூரம் சற்றே அதிகமென் பதால் கள்ளர் சாதி வெறியின் கொடுக்குகள் தம்மைத் தீண்டாது என்றே அந்த அப்பாவிக் காதலர்கள் எண்ணியிருந்தனர். ஆனால்



படிப்பகம்

www.padippakam.com

வன்மத்திலும், வெறியிலும் மையம் கொண்டிருக்கும் இச்சாதி வெறிக்கு இந்த தூரமெல்லாம் ஒரு பிரச்சினையே அல்ல.

லட்சுமியின் சகோதரர்கள் சுப்பிரமணியன், சிவக்குமார், மீனாட்சி சுந்தரம் ஆகிய மூவரும் காதலர்கள் திண்டுக்கல்லுக்கு புலம் பெயர்ந்ததைக் கண்டுபிடித்து சில ரவுடிகளுடன் ஒரு டாடா சுமோவில் செல்கிறார்கள். செப்டம்பர் 7-ஆம் தேதி இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு சிவாஜியை அடித்து வண்டியில் ஏற்றுகிறார்கள். அதைத் தடுக்க முயற்சித்த லட்சுமி அடிபட்டவாறு செய்வதறியாமல் கதறுகின்றார். எப்படியாவது தனது காதல் கணவனைக் காப்பாற்ற வேண்டுமென போலீசில் புகார் கொடுக்கின்றார். அடுத்த நாளே ஆனைமலைப் பகுதியில் சித்ரவதையுடன் கொலை செய்யப்பட்ட சிவாஜியின் உடலைப் போலீசார் கண்டுபிடிக்கின்றார்கள். கோபத்தில் வந்த சகோதரர்கள் சிறிது அடித்து விட்டு தனது கணவனை விட்டு விடுவார்கள் என்று நினைத்தேன், இப்போது என்ன செய்வேன் என்று மனமுடைந்து கதறுகின்றார் லட்சுமி.

உடன் பிறந்த தங்கை தாலியறுத்தாலும் பரவாயில்லை, ஒரு தலித் கள்ளர் சாதிப் பெண்ணைத் தொடக்கூடாது என்று பித்தம் தலைக்கேறிய இந்த சாதிவெறிக் கொடூரத்தை அரங்கேற்றியவர்கள் யாரும் வயதானவர்கள் அல்ல. செல்பேசியும், இருசக்கர வாகனங்களும் இன்னபிற நவநாகரீகங்களைப் பயன்படுத்தியும், விஜய் டி.வியைப் பார்ப்பவர்களாவும் உள்ள இளைஞர்கள்தான். தமது தங்கைக்கு அவளது கணவனது பிணத்தையே திருமணப் பரிசாக வழங்கியிருக்கின்றார்கள், அந்த பாசமிகு அண்ணன்மார்கள். தஞ்சையில் இனி ஒரு கள்ளர் பெண்ணை ஒரு தலித் கை வைக்க நினைத்தால் என்ன நடக்கும் என்பதற்கு இது ஒரு பாடம் என்று தஞ்சை வாழ் கள்ளர்குலக் கூட்டங்கள் வீரக்கதையாகப் பெருமை பேசும். கல்லூரிக்குச் செல்லும் கள்ளர் மாணவிகளும் இந்தக் கதை மட்டுமல்ல இதற்கு முன்னால் நடந்த பல கதைகளையும் மனதில் கொண்டு காதலைக் கற்பனையில் கூட அரங்கேற்றாத மனநிலையை வளர்த்துக் கொள்வார்கள். காதலின் முன்னுதாரணங்களை இலக்கியத்தின் வழியாக ஷாஜகான் - மும்தாஜ், அனார்க்கலி - சலீம், ரோமியோ - ஜூலியட் போன்ற காதலர்களை வைத்து யாரும் சிந்திக்க முடியாது. இங்கே கொலை செய்யப்பட்ட காதலர்களின்



படிப்பகம்

www.padippakam.com

கதைதான் காதலின் யதார்த்த இலக்கியமாகக் கட்டியம் கூறுகின்றன.

இது இந்தியக் காதலின் உண்மை முகம். கலப்பு மணம் செய்த காதலர்களைக் கட்டிவைத்து எரிப்பது இங்கு நெடுநாள் இருக்கும் ஒரு சடங்கு. சில ஆண்டுகளுக்கு முன்னர் விருத்தாசலம் அருகே ஒரு கிராமத்தில் ஒரு தலித் இளைஞனும், ஒரு வன்னியப் பெண்ணும் காதலித்து, திருமணம் செய்து கொண்டார்கள். இதையறிந்து ஆத்திரமடைந்த மணமகள் தரப்பு இருவரையும் படித்து ஊர்கூடி ஆதரிக்க எரித்துக் கொன்றார்கள். ஒரு காதல் ஜோடி எரிந்து சாவதை ஊரின் வன்னியர்கள் திரண்டு வந்து வாழ்த்தும்போது அந்த சாதிவெறியின் வன்மத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. பல சமூக ஆர்வலர்களின் முயற்சிக்குப் பிறகு இப்போதுதான் இந்த வழக்கை சி.பி.ஐ விசாரித்து வருகின்றது. வழக்கு முடிவடையவில்லை என்பதால் குற்றவாளிகள் சுதந்திரமாக உலா வருவதோடு எப்படியும் விடுதலை ஆவோம் என்று திமிராகவும் பேசிவருகின்றார்கள். ஊரே இந்த எரிப்பில் பங்கெடுத்திருக்கும் போது சட்டம் மட்டும் என்ன செய்யும்?

சட்டமும், போலீசும், மொத்தத்தில் இந்த சமூக அமைப்பும் காதலர்களுக்கு எதிராகத்தான் அணிவகுக்கின்றது. சாதி மாறிக் காதலிப்பதில் அதுவும் ஒரு தலித்தாக இருந்துவிட்டால் தண்டனை நிச்சயம் என்பதுதான் யதார்த்தம். ஆதிக்க சாதியின் பெண்ணை ஒரு தலித் தொடுவதால் சாதியின் புனிதம் கெட்டுப்போவதாகச் சாதிவெறி இயல்பாகச் சிந்திக்கின்றது. இத்தகைய அடக்குமுறைகளுக்குள்ளே வாழும் ஒரு பெண்ணுக்கு காதலிக்கும் சுதந்திரம் எங்கே இருக்கின்றது?

காதலில் மட்டுமல்ல, கடவுளிலும் இதே சாதிவெறி அடங்காமல் நர்த்தனமாடுகின்றது. சேலம் கந்தம் பட்டி கிராமத்தில் இருக்கும் திரௌபதி அம்மன் கோவிலில் வழிபடுவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி இல்லை. வன்னியர்கள் கட்டுப்பாட்டில் இருக்கும் அந்தக் கோவிலில் வழிபடும் உரிமைக்காக தலித் மக்கள் நெடுங்காலமாகப் போராடி வருகின்றார்கள். அதன் தொடர்ச்சியாக உயர்நீதி மன்றம் வழிபடும் உரிமையை அமல்படுத்துமாறு உத்தரவிட்டதும், 2008 செப்டம்பர் 8-ஆம் தேதி போலீசார் பாதுகாப்புடன்



படிப்பகம்

www.padippakam.com

தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிலில் நுழைந்து அம்மனை வழிபட்டனர். இதை எதிர்த்து வன்னியர் தரப்பின் 200 குடும்பங்கள் மதுரை உத்தப்புரம் பிள்ளைமார்கள் செய்தது போல ஊரைக் காலி செய்துவிட்டு அருகாமை மலையில் தங்கிப் போராட்டம் செய்கின்றார்கள். அதிலும் சில வன்னிய சாதி வெறியர்கள் கோவில் இருந்தால்தானே கும்பிட வருவாய், கோவிலையே இடித்துவிடுகின்றோம் என்று பேசி வருகின்றார்கள். கோவிலின் புனிதம் கூட சாதிவெறிக்குத் தப்பவில்லை.

காதலித்தால் எரிப்பார்கள்: கும்பிட்டால் கோவிலையே இடிப்பார்கள். இப்போது சொல்லுங்கள் எது காதல்? காதலுக்குத் தேவைப்படுவது என்ன?

●●●



படிப்பகம்

www.padippakam.com

## பீச் வாலிபால்:
## கமான் இந்தியா!
## ஒன்பது அங்குலம்தான் பாக்கி!!

நடந்து முடிந்த ஐ.பி.எல்.லின் இருபது ஓவர் கிரிக்கெட் போட்டிகளைக் குறித்து டெஸ்ட் போட்டி பழம் பெருசுகள் புலம்பித் தீர்த்தனர். சிலரோ கிரிக்கெட் போட்டியை வணிகமயமாக்கம் தின்று தீர்த்தது குறித்து கவலைப்படாமல் அரை நிர்வாண அழகிகள் ஆர்ப்பரித்தது குறித்தே கவலைப்பட்டனர். இதுவாவது பரவாயில்லை. விளையாட்டை ஆதரித்துத்தான் இந்த வெளிநாட்டுப் பெண்கள் ஆடினர். இப்போது இதை விடக் குறைவான உடையுடன் கிட்டத்தட்ட முழு அம்மணத்துடன் வீராங்கனைகள் அதிலும் வெளிநாட்டுப் பெண்கள் பீச் வாலிபால் எனும் விளையாட்டை சென்னையில் ஆடுகின்றனர். சர்வதேச வாலிபால் சம்மேளனம் முதன்முறையாக இந்தியாவில் இந்தப் போட்டியை 2008 ஜூலை 17 முதல் 20 வரை நடத்துகின்றது. சென்னை எலியட்ஸ் கடற்கரையில் 3000 பேர் வரை பார்க்கக்கூடிய காலரி வசதியுடன் போட்டி நடக்கின்றது.

வழக்கமான வாலிபால் போட்டிகளில் அறுவர் ஆடும் போது, கடற்கரை வாலிபாலில் இருவர் மட்டும் ஆடுவார்கள். இன்னும் சில விதிமுறைகளும் மாறுபடும். இதெல்லாம் பரவாயில்லை.

இந்த ஆட்டத்தில் ஆடும் பெண் வீராங்கனைகள் வெறும் காலுடன் ஆடுவதில் பிரச்சினையில்லை. அப்படித்தான் ஆட முடியும். ஆனால் இவர்கள் அணியும் உடை குறித்தும் ஒரு விதிமுறை உண்டு. அதன்படி பெண்களின் மேல்கச்சைக்கும்



படிப்பகம்

www.padippakam.com

இடுப்புக் கச்சைக்கும் இடையில் ஒன்பது அங்குலம் இடைவெளி இருக்க வேண்டுமாம். பச்சையாகச் சொன்னால் பிராவுக்கும் ஜட்டிக்கும் இடையில் உள்ள உடலைக் காட்ட வேண்டும். அதை மறைத்து உடை அணிந்தால் விளையாடுவதற்கு அனுமதி கிடையாது.

கட்டுப்பெட்டிகளின் தேசமான இந்தியாவின் வீராங்கனைகள் நீச்சல் உடை அணிந்து ஆடுவதற்கு தயாராக இல்லையாம். இதனால் அவர்கள் போட்டிகளிலிருந்து வெளியேற்றப்படும் நிலைமை இருந்தது. கடைசியில் போட்டி உள்ளூரில் நடப்பதால் போனால் போகிறதென்று டீ ஷர்ட்,ஷார்ட்சுடன் இந்திய வீராங்கனைகள் ஆடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். மற்றப்படி வெளிநாட்டுப் பெண்களெல்லாம் கண்ணைப் பறிக்கும் தம்மாத்துண்டு துணியுடன் சகஜமாக ஆடுகின்றனர். இப்படி நீச்சல் உடை அணிந்து ஆடும் வீராங்கனைகளை அழகிகளாக இரசிப்பதற்கு ஆண் இரசிகர்கள் எலியட்ஸ் பீச்சை மொய்க்கின்றனர். ஒரு விளையாட்டுப் போட்டியை இரசிப்பதற்கு பாலுறவு இரசிகர்கள் படையெடுக்கின்றார்கள். பத்திரிகைகளும் போட்டி போட்டுக் கொண்டு இந்த நீச்சல் உடைக் காட்சிகளைப் பிரசுரிக்கின்றன.

எந்த ஒரு விளையாட்டையும் அதற்குத் தேவையான உடையுடன்தான் ஆட முடியும். எனினும் இந்த அறிவியல் உண்மை ஆண்களுக்கு மட்டுமே கடைபிடிக்கப் படுகின்றது. பெண்களைப் பொறுத்தவரை விளையாட்டின் தேவையை விட ஆண் இரசிகர்களின் தேவை கணக்கில் கொள்ளப்படுகின்றது. இதனால் தாலிபான்கள் சொல்வது போல ஓட்டப் பந்தய வீராங்கனைகள் பர்தா போட்டுக் கொண்டு ஓட வேண்டும் என்று நாம் சொல்லவில்லை. ஜிம்னாஸ்டிக் உலகில் சாதனை படைத்த ருமேனியாவின் நாடியாவை நாம் களத்தில் பார்க்கும்போது அவரது உடை நம் கண்களுக்கு முக்கியமாகப் படுவதில்லை. ஒரு மனித உடல் செய்யும் எல்லையில்லா வலிமையுடன் கூடிய நளினத்தைச் சாதனையாகப் பார்த்து உற்சாகம் அடைகின்றோம். இருப்பினும் எல்லாத் துறைகளிலும் பெண்களைக் கவர்ச்சிப் பதுமையாக விற்றுவரும் உலகமயமாக்கம் விளையாட்டிலும் அதையே அமல்படுத்துகின்றது

டென்னிஸ் உலகை எடுத்துக் கொள்ளுங்கள். மரியா ஷரபோவா, வீனஸ் வில்லியம்ஸ், ஏன் நமது சானியா மிர்சா வரை



படிப்பகம்

www.padippakam.com

உள்ள வீராங்கனைகள் அனைவரும் நம் மூளையில் எப்படி சேமிக்கப் பட்டிருக்கிறார்கள்? இவர்களது பிரபலமான ஆட்ட இலாவகமெல்லாம் நமது சித்தரிப்பில் இல்லை. அவர்களது குட்டைப் பாவாடை காற்றில் தூக்கிய காட்சிகளைத்தான் ஊடகங்கள் நம்மிடம் சேர்ப்பிக்கின்றன. அறுத்துப் போட்ட ஆட்டிறைச்சியைப் போல டென்னிஸ் உலகில் பெண் வீரர்கள் அழகிகளாகத் தொங்கவிடப் படுகின்றனர். பல வீராங்கனைகள் ஆட்டத்தில் முன்னேறுவதை விட மாடல்களாக மாறுவதுதான் அதிகமாக நடக்கின்றது. வீராங்கனைகள் விளம்பர அழகிகளாக மாறுவதும், விளையாட்டு இரசிகர்கள் பொறுக்கிகளாக மாற்றப்படுவதும் ஒருங்கே நடக்கின்றது. பெரும் மூலதனமிட்டு நடத்தப்படும் தொழிலாக மாற்றப்பட்ட இன்றைய விளையாட்டுப் போட்டிகளின் கைங்கர்யத்தில் ஆண் வக்கிரத்திற்கு தீனி போடும் வகையில் பெண்ணுடல் மாற்றப்படுகின்றது. மிச்சம் மீதி வைக்காமல் எல்லா வழிகளிலும் பெண்ணுடல் உலகின் கவனைத்தைப் பெறும் வகையில் கட்டியமைக்கப் படுகின்றது.

பீச் வாலிபால் இந்த வக்கிரத்தின் உச்சம். மேற்குலகின் குளிர் தட்பவெட்ப நாடுகளில் வாழும் மக்கள் சூரியக் குளியல் போடுவது வழக்கமான விசயம். ஆனால் கடற்கரையை வைத்து முக்கியமாக நீச்சல் உடைப் பெண்களை மையமாக வைத்து அங்கே பல பொழுதுபோக்குகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. பிரபலமான பே வாட்ச் எனும் நீச்சல் உடை அழகிகளின் டி.வி. தொடர் இதற்கோரு எடுத்துக்காட்டு. இதில் நடித்த பமீலா ஆண்டர்சனின் பெருத்த மார்பகங்களும், தொடைகளும்தான் இரசிகர்களிடம் புகழ் பெற்றன. நீச்சல் உடை அழகிகள் ஆடிப்பாடும் நிகழ்ச்சிகள் எம்.டி.வியில் நேரடியாகக் காட்டப்படுகின்றன. அமெரிக்காவில் போதைப் பொருள்கள், கடின ராக் இசை, பிகினி உடை அழகிகள், ஆட்டம் பாட்டம் முதலியனவற்றைக் கொண்டாடுவதற்கு பல கடற்கரை கிளப்புகள் இருக்கின்றன. இந்த அழகியலின் விதிகளோடுதான் பீச் வாலிபால் அறிமுகப்படுத்தப் பட்டது. அதனால்தான் டிரஸ் கோட் எனும் பெயரில் பிகினி உடை அணிவதை இவ்விளையாட்டில் விதிமுறையாக வைத்திருக்கின்றார்கள். ஆகவே பீச் வாலிபால் என்பது வெறும் விளையாட்டு மட்டுமல்ல. அது கடற்கரைக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதி. இதில் நீச்சல் உடை அழகிகள் வீராங்கனைகள் என்ற பெயரில் ஷோ நடத்துகின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

எலியட்ஸ் கடற்கரையில் நடக்கும் போட்டியில் பெண்கள் நாகரிகமான உடை அணிந்து விளையாட வேண்டும் இல்லையேல் போட்டியை அனுமதிக்கக் கூடாது என்று பா.ஜ.க.வின் சேலை கட்டிய பெண்கள் காவல்துறை ஆணையரிடம் மனு கொடுத்திருக்கின்றனர். பாரத மாதாவின் உடையை உருவிப் பன்னாட்டு முதலாளிகளுக்கு கூட்டிக் கொடுத்த கட்சி கடற்கரை வாலிபாலுக்காக கண்ணீர் விடுவது நல்ல வேடிக்கைதான். முதலாளிகளுக்கு விபச்சாரம் - மக்களுக்கு கற்பு - இதுதான் பா.ஜ.க.வின் அரசியல் விபச்சார ஒழுக்கம். எண்ணெயின் பெயரால் ஏழை நாடுகளைச் சுரண்டி அந்தப் பணத்தை அமெரிக்க நிறுவனங்களில் மூலதனமிட்டு ஆட்டம் போடும் அரபு ஷேக்குகள் தங்களது நாட்டுப் பெண்களை மட்டும் பர்தா சாக்குகளில் மூடிப் பாதுகாக்கும் ஒழுக்கத்திற்கு நிகரானது இது. மக்கள் பிரச்சினைகளுக்காக மனமுருகும் இந்த வேடதாரிகளை முறியடிப்பதும் கடற்கரை வாலிபாலுக்கு நாம் காட்டும் எதிர்ப்பும் வேறுவேறல்ல.

பார்ப்பனிய நிலப்பிரபுத்துவம், பாதுகாப்பு என்ற பெயரில் பெண்ணை அடிமைப்படுத்துகின்றது. உலகமயத்தின் முதலாளித்துவமோ சுதந்திரம் என்ற பெயரில் பெண்ணைக் கடித்துக் குதறுகின்றது. இத்தகைய வக்கிர நிகழ்ச்சிகளை நாம் உடனுக்குடன் எதிர்ப்பது அவசியம். அந்தப் போராட்டத்தில் விளக்குமாற்றுடனும், செருப்புடனும் உழைக்கும் பெண்கள் நிறைந்திருக்க வேண்டும். அப்போதுதான் பெண்ணை மரியாதை செய்யும் அழகை நாம் கற்றுக் கொள்ளவும் பெற்றுத் தரவும் முடியும்.

●●●



படிப்பகம்

www.padippakam.com

# ரிலையன்ஸ் ஃபிரஷ்ஷில் மனிதக் கறி!

எல்லாம் நடந்தும் எதுவும் நடக்காதது போல நெருக்கிச் செல்லும் வாழ்க்கையின் கண்களில் சில தழும்புகள் மட்டும் பதிந்து விடுகின்றன. அப்படித்தான் அந்த இளைஞனின் தற்கொலையை நேற்று அறிந்து அதிர்ச்சியடைந்தேன். அன்றாடம் பல கொலைகளும், விபத்து மரணங்களும், இயற்கைச் சாவுகளும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. எல்லா வழியிலும் மரணம் காத்துக் கொண்டிருப்பது தெரிந்தாலும் அன்றாட வாழ்வின் நிகழ்வுத் தருணங்கள் அதை நினைவு வைத்துக் கொள்வதில்லை. வாழ்வைப் பற்றியே நினைக்க நேரமில்லாத போது சாவைப் பற்றி நினைக்க முகாந்திரமேது? என்றாலும் இந்தச் சாவு ஒரு கணம் என்னை நிலைகுலைய வைத்து விட்டது. ஐந்தாண்டுகளுக்கு முன்பு சென்னையில் பேரங்காடிகளும், சங்கிலித் தொடர் கடைகளும் முளைவிட்ட நேரம்.

சிறுவணிகத்தைப் பெருவணிகம் முந்திச் சென்ற காலம். பெருகிவரும் நடுத்தரவர்க்கத்தின் முன்னேற்றத்தின் அளவுகோலாக சூப்பர் மார்க்கெட்டுகள் உதிக்கத் தொடங்கியிருந்தன. காய்கறிக் கடைகளும் பழமுதிர்ச் சோலை என்ற பெயரில் நகரெங்கிலும் சற்றே பிரம்மாண்டமாகக் கடைவிரித்த நேரம். புறநகர் பகுதி ஒன்றில் புதிதாகத் துவங்கப்பட்ட அந்தக் காய்கனி அங்காடியில் வாரம் ஒரு முறையாவது காய்கள் வாங்கச் செல்வது உண்டு.

சிறு கடைகளில்தான் காய்கள் வாங்குவது பழக்கம் என்றாலும் தக்காளி, வெங்காயம், உருளை மட்டும் அந்தக் கடையில்,



படிப்பகம்

www.padippakam.com

வாங்குவது பழக்கமானது. இந்த மூன்று காய்கள்தான் பல இளைஞர்களைப் போல எங்களுக்கும் தேசிய உணவாக இருந்தது. பேச்சுலராக வாழ்வைக் கழிக்கும் நேரத்தில் சமையல் என்பது சமயத்தில் தவிர்க்க முடியாத துன்பமாக ஆவதும் உண்டு. எனினும் நாடாறு மாதம் காடாறு மாதம் போல உணவு விடுதி, பிறகு சலிக்கும் போது சமையல். நண்பர்கள் மத்தியில் என் கையே மணக்கும் என்று சபிக்கப்பட்டிருப்பதால் காய்கள் வாங்குவதும் எனக்கிடப்பட்ட பணியானது.

சுமார் ஆயிரம் சதுர அடியில் இருக்கும் அந்தக் கடையை தென் மாவட்டத்து அண்ணாச்சி ஒருவர் நடத்தி வந்தார். ஆரம்பத்தில் பத்து விடலைச் சிறுவர்கள் வேலை பார்த்து வந்தனர். அதிகாலை மூன்று மணிக்கு கோயம்பேடு சென்று மூன்றுசக்கர வாகனத்தில் மூட்டைகளைக் கொண்டு வந்து தரம்பிரித்து அடுக்கி, பழையதன் கழிவைக் கொட்டி, விலைப்பட்டியல் எழுதி அட்டையில் தொங்க விட்டு, காலை ஆறு மணிக்கு கடையைத் திறந்து இரவு பதினொன்றுக்கு மூடி .. என்று நிற்காத தொடர்வண்டி போல ஓடும் அந்த வாழ்க்கையைப் பார்க்கும்போது மனது வலிக்கும். அண்ணாச்சியிடமும், அந்தச் சிறுவர்களிடமும் அவர்களின் காய்கனிச் சிறைவாழ்க்கையை கலகலப்பாக ஆக்கும் பொருட்டு பேசுவது உண்டு. தூங்கி வழியும் அந்தச் சிறுவர்கள், அவர்களுடைய வாழ்க்கையை விசாரிக்கும்போது மட்டும் ஒரு கணம் மின்னுவார்கள்.

2007-இல் அந்தப் பகுதிக்கு திடீரென்று வந்து சேர்ந்தது ரிலையன்ஸ் பிரஷ். அறிமுகச் சலுகை, உறுப்பினர் சேர்க்கை, தள்ளுபடி விலை என்று தினந்தோறும் அறிவிக்கப்பட்ட மோடிமஸ்தான் வேலையால் சுற்றுப்புற பலசரக்குக் கடைகள் தள்ளாடத் துவங்கின. நமது அண்ணாச்சி அதற்கு முன்பு வரை தினமும் ரூபாய் பத்தாயிரம் முதல் இருபதாயிரம் வரை கல்லா கட்டியவர்; இப்போது ஐந்தாயிரமாகச் சுருங்கிப் போனார்.

ஆரம்பத்தில் ரிலையன்ஸ் அப்படி ஒன்றும் நம்மை அசைத்து விடாது என அப்பாவியாக நம்பினார். மெல்ல மெல்லச் சிறுவர்களின் எண்ணிக்கை மூன்றாகக் குறைந்து போனது. தினசரி விற்பனை இரண்டாயிரம் ரூபாயாகச் சரிந்தது. பிறகு, வேலையாளின் சம்பளத்தையாவது மிச்சப்படுத்துவோம் என்று தனது குடும்பம் முழுவதையும் கடையில் இறக்கினார் அண்ணாச்சி.



படிப்பகம்

www.padippakam.com

இருப்பினும் நான்கு மாதத்திற்கு மேல் அந்தக் கடையின் மரணத்தை ஒத்திப்போட முடியவில்லை.

ரிலையன்ஸின் சுற்றுவட்டாரத்தில் இப்படி சில ஜீவராசிகள் வாழ்வை இழப்பது பற்றி கட்சிமாறிய நடுத்தரவர்க்கம் அக்கறைப் படவில்லை. கேட்டால் 'அண்ணாச்சி கடையில் ஐம்பது காசு அதிகம்' என்று அம்பானியின் பிரச்சாரப் பீரங்கிகளாகப் பேசினார்கள்.

அண்ணாச்சி கடையில் கார்பெண்டர் வேலை நடந்து கொண்டிருந்தது. எனக்கு ஆச்சரியம்! விசாரித்தேன். கடையை ரிலையன்ஸ் போல அலங்காரமாகப் புதுப்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். புதுப்பிப்பவர் பழைய அண்ணாச்சி இல்லை. கடையை விற்று விட்டு அண்ணாச்சி காற்றில் கரைந்து விட்டார். தூக்கம் கலந்த விழிகளுடன் வேலை செய்த அந்தப் பழைய சிறுவர்களை நினைத்துப் பார்த்தேன். சுனாமியில் தொலைந்து போனவர்களை நினைவில் தானே துழாவ முடியும்!

பிறகு சில நாள்களுக்குப் பிறகு அந்தக் கடை ரிலையன்ஸ் போல குளிர்சாதன வசதியுடன், சீருடை அணிந்த பணியாளர்களுடன், கணக்குப் போடும் கணினியுடன், கடையின் பெயர் அச்சிடப்பட்ட நாகரீகப் பைகளுடன் மொத்தத்தில் அழகாகத்தான் திறக்கப்பட்டது. இப்போது யாரென்று விசாரிக்கையில் கடை உரிமையாளர் நாமக்கல்லைச் சேர்ந்த ஒரு இளைஞர் என்று சொன்னார்கள். ஏதோ ஒரு பழமுதிர்ச் சோலையில் எட்டாயிரம் சம்பளத்தில் மேலாளராகப் பணியாற்றியவராம். அங்கே தொழிலைக் கற்றுக் கொண்டு சொந்தமாக ஒரு கடை ஆரம்பித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற கனவுடன் சில இலட்சங்களைக் கடன் வாங்கி இந்தக் கடையை அணுஅணுவாக அலங்கரித்து திறந்திருக்கிறார். அவருக்கு ஒரு 27 வயது இருக்கலாம். அப்போதுதான் அவருக்கு திருமணமும் ஆகியிருந்தது. காதல் திருமணம். காதலில் வெற்றி பெற்ற கையோடு சுய தொழிலிலும் உழைத்து முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் அவரது கண்களில் மின்னியது. சில நேரம் அவரது மனைவியும் கடையில் பில் போடும் வேலை செய்வதைப் பார்த்திருக்கின்றேன்.

ரிலையன்ஸ் வந்ததும் அருகாமையில் உள்ள சிறு கடைகளிலேயே எல்லாவற்றையும் வாங்குவதாக முடிவெடுத்து விட்டதால் அந்தக் கடைக்கு செல்வதில்லை. சமயத்தில் ஒரு நண்பர்


படிப்பகம்

www.padippakam.com

அந்தக் கடைக்கு அழைத்துச் சென்று சாத்துக்குடி பழச்சாறு வாங்கித் தருவார். சாதாரணமாக மற்ற கடைகளில் அதன் விலை 20 ரூபாய். இங்கு மட்டும் அதன் விலை ரூ.10.. வாடிக்கையாளரை ஈர்ப்பதற்க்காக இந்த விலை குறைப்பு. 'நீர் சேர்க்காமல் பழச்சாறை மட்டும் கொடு" என்று கடைச் சிப்பந்தியை அந்த இளைஞர் நிர்ப்பந்திப்பதை சிலநேரம் பார்த்திருக்கின்றேன். சில சமயம் சுறுசுறுப்பாக வாயிலில் நின்றுகொண்டு வரும் மக்களை அவர் கவனிப்பதையும் கண்டிருக்கின்றேன்.

இருப்பினும் ரிலையன்ஸை எதிர்த்து இவர் மட்டும் எப்படி தாக்குப் பிடிக்க முடியும் என்று நானும் நண்பரும் விவாதிப்பதுண்டு. இதை அந்த நாமக்கல் இளைஞரிடம் பேச விருப்பமிருந்தாலும் தயக்கமிருந்தது. அபசகுனமாக பேசுகிறார்களே என்று அவர் நினைத்து விடக் கூடுமல்லவா! ஏதோ கொஞ்ச நாளைக்கு மலிவு விலையில் பழச்சாறை குடிக்க வாய்ப்பிருக்கிறது என்று நண்பருடன் தமாசாகப் பேசிவிட்டு அகன்று விடுவோம். கடையில் காய்கறிகளும் மிக மலிவாகவே விற்கப்பட்டது எங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதுண்டு. இது எப்படி சாத்தியம், ஏதாவது வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தை இப்படி முதலீடு செய்து செலவழிக்கின்றாரா என்றெல்லாம் எங்களுக்குள் விவாதிப்பது உண்டு.

உண்மையில் அவர் கந்துவட்டிக்கு கடன் வாங்கியதெல்லாம் அப்போது தெரியாது. மேலும் வாடிக்கையாளரைக் கவர மூன்று சதவீதம் மட்டும் இலாபம் வைத்துக் காய்கறிகளை விற்று வந்ததையும் நாங்கள் அறியவில்லை. இந்த இலாப விகிதத்தில் எந்தத் தொழிலும் செய்ய முடியாது என்பதோடு, இப்படி தொழில் நடத்தினால் கடைசியில் எதுவும் மிஞ்சாது. இடையில் 2008-இல் ரிலையன்ஸ் கடை இரண்டாவது கிளையையும் இப்பகுதியில் திறந்துவிட்டது. இரு வல்லூறுகளுக்கிடையில் ஒரு கோழிக்குஞ்சு எத்தனை நாள் தப்பிக்க முடியும்? என்னதான் நவநாகரீகமாக கடை நடத்தினாலும் நட்டத்திலிருந்து தப்பிக்க முடியவில்லை. கடை திறந்து நான்காவது மாதத்திலேயே காய்கள் வாடத் துவங்கின. கைமாற்றுப் பணமில்லாத காரணத்தால் புதிய காய்கறிகள் அடிக்கடி வரவில்லை. கூட்டமும் குறையத் தொடங்கியது.

இதற்குள் அவர் மாதத்திற்கு ஒன்றரை இலட்ச ரூபாய் நட்டமடைந்திருந்தார். மொத்தம் ஐந்து இலட்சம் கடனாகி விட்டது.



படிப்பகம்

www.padippakam.com

வழக்கமாக கோயம்பேட்டில் சில்லறை வியாபாரிகள் கடனுக்கு காய் வாங்கி அடுத்த நாள் மொத்த வியாபாரிகளுக்கு பணம் கட்டு வார்கள். இந்த முறையையும் அந்த நாமக்கல் இளைஞர் பின்பற்ற முடியவில்லை. கைப்புழக்கத்திற்குக் கூட பணமில்லாத நிலையில் ஒரு இலட்ச ரூபாயைக் கடன்பெற முயற்சித்திருக்கிறார். கிடைக்க வில்லை. கோயம்பேட்டிலும் மொத்த வியாபாரிகள் கடனுக்கு காய் வழங்க மறுத்து விட்டனர். 25,000 கோடி முதலீட்டுடன் இந்திய சில்லறை வணிகத்தை ஆக்கிரமிக்க வந்திருக்கும் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தை ஐந்து இலட்சத்தை வைத்துக் கொண்டு ஒரு நாமக்கல் இளைஞர் எதிர் கொள்ள முடியுமா என்ன? எல்லா இடத்திலும் கடன் கேட்டும் கிடைக்காமல் வீட்டுக்கு வந்த அந்த இளைஞர் தூக்குப் போட்டுக் கொண்டார். அவரது மனைவிக்கு என்ன ஆகியிருக்கும்? வழக்கம் போலத் 'தெரியவில்லை' என்பது தான் விடை.

இப்போது அதே கடையை வேறொரு அண்ணாச்சி - ஏற்கனவே சில கிளைகளை வைத்திருப்பவர் - வாங்கி அதே பெயரில் நடத்து கின்றார். அவர்தான் நேற்று இந்த விவரங்களைச் சொன்னார். இவரும் எத்தனை நாள் தாக்குப்பிடிப்பார் என்பதை யோசிக்காமல் இருக்க முடியவில்லை. யோசிப்பதை அவரிடம் பேசவும் முடிய வில்லை.

அதே கடை. அதே பெயர். அண்ணாச்சிகள் மட்டும் மாறியபடி இருக்கின்றார்கள். உயிர்களைக் குடித்துத் தாகம் அடங்காத பலி பீடம் போல என்னை அச்சுறுத்துகின்றது அந்தக் கடை. அந்தக் கடைப் பக்கம் செல்லும் போதெல்லாம் தூக்கில் தொங்கிய அந்த இளைஞனின் நம்பிக்கை ஒளிரும் கண்களும், கணவனுக்குத் துணை நின்ற அந்தக் காதல் மனைவியின் முகமும் கொஞ்சம் தடுமாற வைக் கின்றன. விலை மலிவு என்பதற்காக பத்து ரூபாய் பழச்சாறைக் குடித்த குற்ற உணர்விலிருந்து என்னால் இன்னமும் விடுபட முடிய வில்லை.

•••



படிப்பகம்

www.padippakam.com

# ஜீன்ஸ் பேண்ட்டும், பாலியல் வன்முறையும்!

பத்தாண்டுகளுக்கு முன்பு இத்தாலியில் நடந்த ஒரு பாலியல் வன்முறை (கற்பழிப்பு) வழக்கில் நீதிமன்றம் குற்றவாளியை விடுதலை செய்தது. அந்தக் குற்றவாளி 45 வயதுடையவன், காரோட்டும் பயிற்சி அளிக்கும்போது ஒரு பெண்ணைப் பாலியல் வன்முறை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவன். கீழ் நீதிமன் றத்தில் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டவன் மேல் நீதிமன் றத்தில் விடுவிக்கப் பட்டான். காரணம் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட அந்தப் பெண் சம்பவம் நடக்கும்போது இறுக் கமான ஜீன்ஸ் பேண்ட் அணிந்திருந்தாளாம். அதை அந்தப் பெண்ணின் அனுமதியில்லாமல் அகற்ற முடியாது என்பதால் நடந்தது கற்பழிப்பு இல்லை என விளக்கமளித்த நீதிமன்றம் மேலும் அந்தப் பெண்ணின் விருப்பத்தோடு நடந்த உறவு என்று அவனை விடுதலையும் செய்தது.

கார்டியன் செய்தித்தாளில் ஜூலி பின்டால் எழுதிய கட் டுரையை சென்ற ஆண்டு ஜூலை மாதம் இந்து நாளிதழ் வெளியிட் டிருந்தது. ஆணாதிக்கத்தின் திமிரோடு படுபிற்போக்காகத் தீர்ப்பளித் திருக்கும் நீதிமன்றம் பத்தாண்டுகள் கழித்து இப்போது அந்த விளக் கத்தை வேறு ஒரு வழக்கில் திருத்தி விட்டதாம். தனது கூட்டாளியின் பதினாறு வயது மகளைக் கற்பழிக்க முயன்ற கயவன் மேற்கண்ட இறுக்கமான ஜீன்சு பேண்டு விளக்கத்தை வைத்து வாதிட்ட போது நீதிமன்றம் அதை ஏற்கவில்லையாம். இந்த சுயவிமரிசனத்தை


படிப்பகம்

www.padippakam.com

எடுத்துக் கொள்வதற்கு பல போராட்டங்களும், பத்தாண்டு காலமும் ஆகியிருக்கின்றது. பாலியல் வன்முறையின் பால் பல நீதிமன் றங்கள் உலகெங்கும் இப்படிப்பட்ட அணுகுமுறையைத்தான் கையாளுவதாக ஜுலி குறிப்பிடுகின்றார். அதாவது ஒரு பெண் என்ன உடை அணிந்திருக்கிறாள், எப்படி நடந்து கொள்கிறாள் என் பதெல்லாம் கற்பழிப்பு வழக்குகளில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இதனால் பல குற்றவாளிகள் சட்டத்தின் ஓட் டைகள் வழியாகத் தப்பித்துக் கொள்கின்றனர். உலகெங்கும் பாலியல் வன்முறைகளுக்காகத் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகள் விகிதம் குறைவாகத்தான் உள்ளது.

தன்னை வல்லுறவுக்குள்ளாக்கிய அயோக்கியனை ஒரு பெண் பொதுஅரங்கில் தண்டிக்க நினைப்பதே அரிது: இந்தியா போன்ற நாடுகளில் அது இன்னமும் கடினமான ஒன்று. கற்பு, புனிதம் என்ற சங்கிலியில் பூட்டப்பட்டிருக்கும் ஒரு பெண் தான் கற்பழிக்கப்பட் டவள் என்று நீதி கோரினாலே அவள் வாழ்க்கை அத்துடன் முடிந்தது. பார்ப்பனியத்தின் விழுமியங்களால் இயங்கிவரும் சமூகம் அவளைப் புனிதம் கெட்ட அபலையாகத்தான் பார்க்கின்றது. தமிழ் சினிமாவில் கூட கற்பழித்தவனைக் காப்பாற்றுவதற்கு வழக் குரைஞர் பாதிக்கப்பட்ட பெண்ணிடம் அவன் எங்கே கை வைத்து என்ன செய்தான் என்று வாதிடும்போது, எதுவும் சொல்ல முடி யாமல் அந்தப் பெண் அழுது அரற்றுவாள். நிழலில் மட்டுமல்ல, நிஜத்திலும் இதுதான் யதார்த்தமாக உள்ளது. சிதம்பரம் பத்மினி போன்ற வீரப் பெண்கள்தான் இந்தப் போராட்டத்தை எதிர் கொண்டு நீதியை நிலைநாட்டியிருக்கின்றனர். இவையெல்லாம் விதிவிலக்கு கள்தான் என்ற போதும் சட்டமும், நீதிமன்றங்களும் கூட இதற்குத் தோதாகத்தான் இயங்குகின்றன என்பது முக்கியம்.

நீதிமன்றங்கள் மட்டுமல்ல கற்பழிப்புக்கு ஓரளவு பெண்களும் காரணமாக இருக்கின்றனர் என்பது உலகத்தின் பொதுப்புத்தியாக இருக்கின்றது என்கிறார் ஜுலி. அம்னஸ்டி அமைப்பு 2007ல் உல கெங்கிலும் உள்ள இளைஞர்களிடம் நடத்திய கருத்துக் கணிப்பில் பதிலளித்த கால்பங்கினர் கற்பழிப்புக்கு பகுதியளவோ, முழுமை யாகவோ பெண்களும் செக்சியான உடை அணிவதன் மூலம் கார ணமாக இருக்கின்றனர் என்று தெரிவித்தனராம். இதையே அயர் லாந்தில் நடந்த ஆய்விலும் நாற்பது சதவீதம் பேர் வழி மொழிந்தி ருக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆண்களின் கற்பழிப்பு நடவடிக்கைகளுக்கு வக்காலத்து வாங்கும் இந்தக் கருத்துக்கள் இந்தியா போன்ற பின்தங்கிய நாடுக ளுக்கு மட்டுமல்ல முன்னேறிய நாடுளுக்கும் சொந்தமாக இருக் கின்றது. ஒரு பெண் உடை அணிவதன் மூலம் ஒரு ஆணை கற்ப ழிப்பு நடவடிக்கைக்கு ஈர்க்கின்றாள் என்ற வாதம் உண்மையில் பெண்ணைத்தான் குற்றவாளி ஆக்குகின்றது. தப்பு செய்யும் ஆண்க ளெல்லாம் சூழ்நிலையின் கைதிகளாகக் கருதப்படுகின்றார்கள். இதுதான் உலகத்தின் பொதுக்கருத்து என்றால் பெண்கள் சமூக வாழ்க்கையில் எத்தகைய அபாயத்துடன் வாழ வேண்டியிருக்கும்?

நைஜீரியாவில் ஒரு செனட்டர் ஒரு மசோதாவை முன்மொழிந் திருக்கிறாராம். அதன்படி ஒரு பெண் தனது அங்கங்கள் தெரியும் வண்ணம் உடையோ, குட்டைப் பாவாடையோ அணிந்து பொது இடத்தில் வலம் வந்தால் மூன்று மாதம் சிறை தண்டனையாம். இது அமலுக்கு வரும் பட்சத்தில் நைஜீரியாவின் சார்பில் ஒலிம்பிக் ஓட் டப்பந்தயத்தில் கலந்து கொண்ட வீராங்கனைகள் அனைவரும் குற் றவாளியாகி விடுவார்கள்! இதே போல போலந்திலும் ஒரு சட்ட மன்ற உறுப்பினர் தெரு விபச்சாரத்தையும் கற்பழிப்புகளையும் குறைப்பதற்காக குட்டைப் பாவாடை அணிவதற்குத் தடை செய்யும் மசோதாவைத் தாக்கல் செய்வதற்கு திட்டமிட்டிருக்கின்றாராம். வடக்கு மலேசியாவில் ஒரு பழமைவாத நகரக் கவுன்சில் குதிகால் செருப்புக்களையும், கண்ணைப் பறிக்கும் உதட்டுச் சாயங்களையும் தடை செய்வதன் மூலம் கற்பழிப்புக்களையும், முறையற்ற பாலியல் உறவுகளையும் குறைக்க திட்டமிட்டிருக்கின்றதாம்.

இந்த விசயத்தில் இசுலாமியவாதிகளை யாரும் மிஞ்ச முடியாது. ஒரு தடித்த சாக்குப்பையை உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு சுண்டுவிரலைக் கூடக் காட்டாமல் பெண்கள் நடமாட வேண்டும் என்பது அவர்கள் கருத்து. இதில் அனைவரும் தாலி பான்களாக இருக்கிறார்கள். இல்லையென்றால் ஆண்களின் காமம் தலைவிரித்து ஆடுமாம். ஏன்தான் ஆண்களை அப்படி காமவெறி பிடித்தவர்களாக அல்லா படைத்தார் என்பது தெரியவில்லை.

இறுதியாக ஜூலி பின்டால் பெண்களைப் பற்றி புனையப்பட் டிருக்கும் இக்கருத்துக்களைச் சாடி ஒரு பெண் என்ன அணிவது என்பதை அவள் தீர்மானிக்கட்டும், அதை மற்றவர்கள் கட்டளை யிடத் தேவையில்லை, ஒரு பெண் குடித்திருந்தாலும், குட்டைப்



படிப்பகம்

www.padippakam.com

பாவாடை அணிந்திருந்தாலும் யாரும் அவளைக் கற்பழிக்க முடியாது, அப்படி நடந்து கொண்டால் அது குற்றமே, அதற்கு பெண்ணைக் காரணமாக சொல்வதை ஏற்க முடியாது என்கிறார்.

உண்மைதான். ஒரு பெண் சாக்குத் துணியை மூடியிருந்தாலும், திறந்த மார்பகத்தோடு நடமாடினாலும் அவளைக் கற்பழிக்க முடி வெடுத்து விட்ட கயவர்களுக்கு உடை ஒன்றும் ஒரு பொருட்டல்ல. ஒரு பெண் தனியாக ஆள் நடமாட்டமற்ற பகுதியில் சிக்குவதுதான் அவர்களுக்கு தேவையான ஒன்று. இதைக் கடுமையான சட்டத்தின் மூலமே தண்டிக்க முடியுமேயன்றி பெண்கள் ஆபாசமாக ஆடை அணிகின்றார்கள் என்று சால்ஜாப்பு சொல்வது பெண்ணை அடிமை யாகக் கருதும் வெளிப்படையான ஆணாதிக்கத் திமிராகும்.

ஆனால் ஜூலி பின்டாலின் கருத்தோடு கூடுதலாக நாம் சொல் வதற்கு சில விசயங்கள் இருக்கின்றன. ஒரு பெண் எந்த ஆடை உடுத்த வேண்டும் என்பது அவளது விருப்பம், சுதந்திரத்தைப் பொறுத்தது என்பதில் சிறிய சிக்கல் இருக்கின்றது. இன்றைய பெண் களின் நடை, உடை, பாவனைகளை அவர்கள் தெரிவு செய்வ தில்லை. மாறாக பன்னாட்டு அழகு சாதன நிறுவனங்கள்தான் அவற்றைப் பயன்படுத்துமாறு பெண்களை நிர்ப்பந்திக்கின்றன. இந் நிறுவனங்களின் நோக்கம் பெண்களின் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவது அல்ல. மாறாக, ஆணின் போகப் பொருளாகப் பெண் ணுடல் மாற்றப்பட வேண்டும் என்பதுதான். ஏனெனில் ஆண் களைக் கவருவதற்குத்தான் ஆயிரக்கணக்கில் பொருள்கள் பெண் களின் மேக்கப் உலகில் குவிக்கப்படுகின்றன.

இந்தியாவில் பூவும், பொட்டும், வளையலும் அணிந்து ஒரு பெண் செல்வதற்கு காரணமென்ன? கணவனைக் கவருவதற் குத்தான். ஆனால் ஆண்கள் யாரும் பெண்களைக் கவருவதற்கு மல் லிகையைச் சூடுவதில்லை. தெருவோரம் நிற்கும் விலைமாது கூட இந்த அலங்காரங்களோடுதான் தனது வாடிக்கையாளரைக் கவரு கின்றாள். இவையின்றி அவளால் தொழிலைச் செய்ய முடியாது. ஆண்களின் இன்பத்திற்காகப் பெண்களைக் கடைச் சரக்காக்கும் இந்த மாயவலையில் இருந்து பெண்கள் விடுபட வேண்டும். அரை நிர்வாண உடையுடன் நடக்கும் ஃபேஷன் ஷோக்கள் எல்லாம் பெண்களின் விடுதலைக்காகவா நடத்தப்படுகின்றன? எந்த அளவுக்கு ஆண்களைக் கவர முடியும் என்பதே அவற்றின் அழகியல்


படிப்பகம்

www.padippakam.com

விதி. உள்ளாடைகளைக் கூட ஆண்களின் கவர்ச்சிக்காகத் தயாரிக்கி றார்களேயன்றி பெண்களுக்கு அவை சிறப்பாகப் பயன்பட வேண்டும் என்பதற்காக அல்ல.

எல்லா விளம்பரங்களிலும், ஏன் ஆண்கள் பயன்படுத்தும் பொருள்களுக்குக் கூட பெண் மாடல்கள்தான் தேவைப்படுகின் றார்கள். இப்படி எல்லா வழியிலும் அல்லும் பகலும் பெண்ணுடல் என்பது உலக முதலாளித்துவ நிறுவனங்களால் அன்றாடம் கற்பழிக் கப்படுகின்றன. அதனால்தான் சொல்கிறோம், ஒரு பெண் தனக் குரிய ஆடைகளை அணிவதற்கு சுதந்திரமில்லை. இதைப் பெற வேண்டுமானால் போகப்பொருளாகக் கருதித் திணிக்கப்படும் இந்த அழகியல் பொருள்களை மறுக்க வேண்டும். இவற்றைத் துறப்ப தில்தான் பெண்ணழகு உண்மையாக மலர முடியும். ஆண்களைக் கவரும் விசயத்திலிருந்து பெண்கள் விடுதலையாவதுதான் அவர் களின் சுதந்திரத்திற்கான முதல் நிபந்தனை.

சமத்துவமான பெண்ணுரிமை என்பது அப்படித்தான் மீட்கப்பட முடியும். அப்போதுதான் நீதிமன்ற உதவியோடு ஆணாதிக்கம் நடத்தும் பாலியல் வன்முறைகளை எதிர்த்துப் போராட முடியும். இது குறித்து பெண் வாசகர்கள், பெண் பதிவர்கள் என்ன நினைக்கி றார்கள்? அதனால் ஆண்கள் கருத்துச் சொல்லக் கூடாது என்பதல்ல. விவாதத்திற்காகக் காத்திருக்கிறோம்!

•••



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கானகத்தின் பசும்புல் தரையில் பாய்ந்தோடும் ஒரு வரிக்குதிரையின் வரிவடிவம் மற்றொரு குதிரையைப் போல இருக்காது என்பதுதானே எல்லா உயிர்களுக்கும் பொருந்தும் உண்மை. ஒருவனுக்கு இருக்கும் கைரேகை போல மற்றொருவனுக்கு இருக்காது என்பது உண்மையாகும் பட்சத்தில் மனிதர்கள் எல்லோரும் உடலளில் வேறுபட்டுத்தானே இருப்பார்கள்? வேறுபடுவதுதான் மனிதனின் உயிரியல் சார்ந்த உண்மையான அழகே அன்றி ஒரே மாதிரியான வார்ப்பு அல்ல. ஆனால் அழகின் வியாபாரிகள் இந்த உயிரியல் உண்மையை புனைவுகளின் மூலம் பொய்யாக்கி விளம்பரங்களின் மூலம் சிந்தையில் ஏற்றுகிறார்கள். எல்லோரையும் ஒரே மாதிரி போல மாற்றும் தொழில் நுட்பத்தை வழங்கும் குளோனிங் எதிர்காலத்தில் நிறைவேறி விடுமென்றாலும் உலக அழகிகளைப் போல குழந்தைகளைப் பெற்றுக் கொள்வது ஒன்றும் மலிவாகிவிடப் போவதில்லை. அப்படியே மலிவாகிப் போனாலும் அது மட்டும் அழகின் பிரச்சினைகளைத் தீர்த்துவிடுமா என்ன?

புதிய
கலாச்சாரம்

ரூ.25

படிப்பகம்